பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 03 வள்ளுவர் ஆண்டு 2050 ஆனி 24 செவ்வாய்க்கிழமை 09.07.2019 கதிர் 246

**இனி இது ரகசியம் அல்ல!**

முரண்பட்டு நிற்கும் இருதரப்புகளுக்கு இடையில் சமரசம் செய்வது - சமாதான இணக்க நிலைக்கான பூர்வாங்க உடன்பாட்டை எட்டச் செய்வது - கத்தி மேல் நடப்பது போன்ற விடயம். முன்னாள் வடக்கு முதல்வர் நீதியரசர் பக்கம் 02



# கூட்டமைப்பினர் - பிரதமர் நேற்று மந்திராலோசனை!

## அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை வர இருக்கையில் முக்கிய விடயங்கள் ஆராய்வு

கொழும்பு, ஜூலை 09

அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை நாளையும், மறுதினமும் நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுக்கப்படும் நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்கள் நேற்று மாலை கொழும்பு, அலரி மாளிகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் சுமார் இரண்டு மணி நேரம் மந்திராலோசனை நடத்தினர்.

கூட்டமைப்பின் தலைவர்களான இரா.சம்பந்தன், மாவை சேனாதிராசா, எம்.ஏ.சுமந்திரன் ஆகிய மூன்று எம்.பிக்களே நேற்று இந்தப் பேச்சுகளில் கலந்து கொண்டனர். பக்கம் 11

## குண்டுத் தாக்குதல் வதந்தியால் பதற்றம்

### அச்சம் கொள்ளவேண்டாம் என்கிறது பாதுகாப்பு அமைச்சு



கொழும்பு, ஜூலை 09

களுத்துறையில் இருந்து கதிர்காமம் வரையான பகுதிகளிலுள்ள அரச நிறுவனங்களை இலக்கு வைத்துக் குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளதாகச் பக்கம் 11

## சுழற்சி முறையில் நாட்டில் மின்வெட்டு

கொழும்பு, ஜூலை 09

நாட்டில் பெரும்பாலான பிரதேசங்களுக்கான மின் விநியோகம் குறைந்தது ஒரு மணிநேரம் சுழற்சி முறையில் தடைப்படும் என்று பக்கம் 11

## முஸ்லிம் மக்கள் மீது நாளாந்தம் கெடுபிடி!

### ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டிய முஸ்லிம் அரசியல்வாதிகள் !

கொழும்பு, ஜூலை 09

முஸ்லிம் மக்கள் மீது நாளாந்தம் கெடுபிடிகள் அதிகரித்து வருகின்றன. நீங்கள் விடுதலை செய்த ஞானசார தேரர் உலமா சபையை விமர்சித்து முஸ்லிம் மக்களுக்கு எதிராகக் கடுந்தொனியில் பேசி வருகிறார். ஜனாதிபதி என்ற ரீதியில் உடனடியாக நீங்கள் நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். - இவ்வாறு பக்கம் 11

## நெதர்லாந்தில் இலங்கையின் இரண்டு தூதுவர்கள் கடமை!

### வெளிவிவகார அமைச்சு திண்டாட்டம்

கொழும்பு, ஜூலை 09

நெதர்லாந்தில் தற்போது இலங்கையின் இரண்டு தூதுவர்கள் உள்ளனர் எனவும், ஒருவர் அதிகாரபூர்வ வதிவிடத்திலும் மற்றொருவர் விடுதியிலும் பக்கம் 11

## நம்பிக்கையில்லாப் பிரேரணை; மக்களின் நலன் சார்ந்தே முடிவு

### கூறுகின்றார் சிறிதரன் எம்.பி.



கொழும்பு, ஜூலை 09

நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு வாக்களிக்காவிட்டால் மஹிந்த ராஜபக்ஷ முன்னிலை பெறுவார் எனத் தமிழ்த் தேசியக் பக்கம் 11

## கம்பெரலிய ஊடாக அரசு தமிழரை ஏமாற்றுகிறது!

யாழ்ப்பாணம், ஜூலை 09

தமிழ் மக்களுக்கான தீர்வு விடயங்களுக்கு எந்தவொரு நடவடிக்கையையும் எடுக்காத அரசு, கம்பெரலிய திட்டத்தின் ஊடாக தமிழ் மக்களை பக்கம் 11

## ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலுக்கு அம்பாந்தோட்டையே காரணம்!

### விஜேதாஸ ராஜபக்ஷ சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூலை 09

அம்பாந்தோட்டை துறைமுகத்தைச் சீனாவுக்கு வழங்கியதற்கும் ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலுக்கும் தொடர்பு இருப்பதாக, நாடாளுமன்ற உறுப்பினர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். பக்கம் 11

## கோட்டாவைச் சிறை வைத்தாலும் அவர்தான் ஜனாதிபதி வேட்பாளர்

### உதய கம்மன்பில திட்டவட்டம்




கொழும்பு, ஜூலை 09

குற்றங்களைச் சுமந்தி, கோட்டாபய ராஜபக்ஷவைச் சிறையில் அடைத்தாலும் அவர்தான் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் என்று கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற பக்கம் 11

## பலாலியில் இருந்து விமான சேவை: புறக்கணிக்கப்படுகிறதா தமிழகம்?

கொழும்பு, ஜூலை 09

இலங்கையின் மூன்றாவது அனைத்துலக விமான நிலையமாக அபிவிருத்தி செய்யப்படும் பலாலி விமான நிலையத்தில் இருந்து, முதற்கட்டமாக ஆரம்பிக்கப்படவுள்ள விமான சேவைகளில், தமிழ்நாட்டில் உள்ள எந்த விமான நிலையமும் இடம்பெறவில்லை பக்கம் 11




தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர் Kalaikkathir



# சிங்கள இராச்சியம் உருவாகினால் கூடவே தமிழ் இராச்சியம் மலரும்!

## ஞானசார தேரருக்கு ஸ்ரீகாந்தா எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 09

இலங்கைத்தீவில் சிங்கள இராச்சியம் ஒன்று உருவாக்கப்படுவதானால், கூடவே தமிழ் இராச்சியம் ஒன்றும் உருவாகும் என்பதனை பௌத்த – சிங்கள பேரினவாத சக்திகளுக்கு அழுத்தம் திருத்தமாகச் சொல்லிவைக்க விரும்புகிறோம்.

– இவ்வாறு தெரிவித்திருக்கிறார் ரெலோவின் செயலாளர் நாயகம் என். ஸ்ரீகாந்தா.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:–

இலங்கையில் மீண்டும் சிங்கள இராச்சியத்தை நிறுவ வேண்டுமென கண்டியில் பெரும் எடுப்பில் மாநாடு கூட்டி பொதுபலசேனா அழைப்பு விடுத்துள்ளது.

இலங்கைத்தீவில் சிங்கள இராச்சியம் ஒன்று உருவாக்கப்படுவதானால், கூடவே தமிழ் இராச்சியம் ஒன்றும் உருவாகும் என்பதனை பௌத்த – சிங்கள பேரினவாத சக்திகளுக்கு அழுத்தம் திருத்தமாகச் சொல்லிவைக்க விரும்புகிறோம்.

இஸ்லாமிய அடிப்படைவாத சவால்களுக்கு எதிரான இயக்கம் ஒன்றை முன்னெடுக்கும் சாட்டில் கலப்படமற்ற சிங்கள – பௌத்த பேரினவாதம் விஸ்வரூபம் எடுக்க முயற்சிக்கின்றது.

1956 இல் முன்வைக்கப்பட்ட சிங்கள இராச்சிய வெறிக்கூச்சல்தான், 30 வருட கால உள்நாட்டு




யுத்தத்திற்கு இறுதியில் அடிகோலியது என்பதனை மறந்து, மீண்டும் பேரினவாதம் அரசியல் அரங்கை ஆக்கிரமிக்க துடித்து நிற்கின்றது.

இலங்கைத் தீவில் இன – மத சமத்துவத்திற்கு இடமில்லை என்பதை இந்தப் பேரினவாத ஆதிக்க சக்திகள் பிரகடனப்படுத்தியுள்ளன.

இச் சந்தர்ப்பத்தில் கல்முனை பிரதேச செயலகப் பிரச்சினையில் பௌத்த – சிங்கள மதவெறிச்சக்திகளின் தலையீட்டை இருகரம் நீட்டி வரவேற்ற சில தமிழ் அரசியல்வாதிகளும் ஒரு சில சமூக அமைப்புக்களும் இப்பொழுது என்ன செய்யப்போகின்றார்கள்? – என்றுள்ளது. (ஐ–07)

# நீர்கொழும்பு தேவாலயத்தை பார்வையிட்டார் சீனத் தூதர்!



மனித வெடிகுண்டுத் தாக்குஉதலுக்கு இலக்கான நீர்கொழும்பு கட்டுவப்பிட்டிய சென். செபஸ்ரியன் தேவாலயத்துக்கு, இலங்கைக்கான சீனத் தூதுவர் செங் யுயியுவான் நேற்று விஜயம் மேற்கொண்டார்.

தேவாலயத்தின் சேதங்களைப் பார்வையிட்ட தூதர், நீர்கொழும்புப் பகுதியில் தாக்குதலில் பாதிக்கப்பட்டர்களைச் சந்தித்து ஆறுதல் கூறினார். பாதிக்கப்பட்டவர்களுக்கு நீர்கொழும்பு மாநகரசபை மூலம் உதவித்தொகையும் வழங்கினார். (ஐ)

# சீனா கையளித்த கப்பல் கொழும்பு வந்தடைந்தது




கொழும்பு, ஜூலை 09

சீன அரசால் இலங்கைக் கடற்படைக்கு வழங்கப்பட்டுள்ள பி 625 கப்பல் நேற்றுக் காலை கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தது.

கப்பலை உத்தியோகபூர்வமாக இலங்கை அரசிடம் கையளிக்கும் நிகழ்வு கடந்த 5ஆம் திகதி சீனாவின் செங்ஹாயில் உள்ள கடற்படைப் பிரிவில் இடம்பெற்றது.

இலங்கைக் கடற்படை அதிகாரிகளின் தலைமை அதிகாரி றியர் அட்மிரல் நிசாந்த உலுகே தென்னவின் தலைமையிலான குழுவினர் இதில் கலந்துக்கொண்டனர்.

1994ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட இந்த கப்பலின் நீளம் 112மீற்றர் ஆகும். அகலம் 12.4 மீற்றர் ஆகும். இதன் எடை 2300 தொன்கள் ஆகும். இதில் 18 அதிகாரிகள் உள்ளடங்களாக 110 பேரைக் கொண்ட பணியாளர் சபையும் கடமையில் ஈடுபட முடியும்.

இலங்கைக் கடற்படை கப்பல் குழுவில் இணைந்துக் கொண்ட பின்னர் இலங்கைக்கு உட்பட்ட ஆழ்கடல் வலயத்துக்குள் தேடுதல், மீட்டெடுத்தல் போன்ற பணிகள், கடல் வளங்களைப் பாதுகாத்தல், கடல் நடவடிக்கைகளில் ஈடுபடும் கப்பல் மற்றும் வள்ளங்களுக்கு உதவிகளை வழங்குதல் ஆகியவற்றுக்காக இந்த கப்பலைப் பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. (ஐ)

# சட்டவிரோதமாக தங்கியிருந்த 14 இந்தியர்கள் நேற்றுக் கைது!

கொழும்பு, ஜூலை 09

விஸா காலாவதியானதையடுத்து இலங்கையில் சட்டவிரோதமாக தங்கியிருந்த 14 இந்தியர்களைக் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

இவர்களில் பன்னிரண்டு பேர் அளுத்கம பகுதியில் ஹோட்டல் கட்டுமான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர்.

இந்தச் சந்தேக நபர்கள் 14 பேரும் மிரிஹான தடுப்பு நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (ஐ)

# ரக்ன லங்கா நிறுவனத்தின் முன்னாள் தலைவர் கைது!

ரக்னலங்கா பாதுகாப்பு நிறுவனத்தின் முன்னாள் தலைவர், விக்டர் சமரவீர நேற்றுக் குற்ற விசாரணைப் பிரிவில் சரணடைந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ளார். அவன்கார்ட் சம்பவம் தொடர்பிலேயே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மிதக்கும் ஆயுதக் கப்பல் தொடர்பாக, அவன்கார்ட் நிறுவனத்தின் தலைவர் நிஸ்ஸங்க சேனாதிபதி உள்ளிட்ட, 8 பேரை உடனடியாக கைது செய்து, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு சட்டமா அதிபர், குற்ற விசாரணைப் பிரிவினருக்கு 5ஆம் திகதி உத்தரவிட்டிருந்தார். (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சி.வீ.விக்னேஸ்வனுக்கும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கும் இடையில் சமரச முயற்சியை ஏற்படுத்த முயன்ற இடைத் தொடர்பாளர் விடயத்தை சொதப்பி, விவகாரத்தைக் குழப்பிவிட்டார் என்று தகவல்கள் கசியத் தொடங்கியிருக்கின்றன.

ஆயுத மோதலில் சம்பந்தப்பட்ட தரப்புக்களுக்கு இடையில் நேரடி சமரச முயற்சிகளில் இடைத் தொடர்பாளராகச் செயற்பட்ட அனுபவம் எனக்குத் தாராளமாக உண்டு.

கத்தி மீது நடக்கும் அந்த வேலையில் எவ்வளவு கவனமாகவும், நுணுக்கமாகவும், அவதானத்துடனும் நடக்க வேண்டும் என்பதை வாசகர்களுக்கு நான் விவரிக்கத் தேவையில்லை.

இரண்டு தரப்புகளுமே மோசமான யுத்தத்தில் ஈடுபட்டிருந்த காலகட்டம். இரண்டு தரப்புகளுமே ஆயுதங்களை சர்வசாதாரணமாகப் பயன்படுத்திய வேளை. தமக்குப் பிடித்தமில்லாத தரப்புகளை இல்லாதொழிக்கும் வல்லமை இரண்டு தரப்புகளிடமும் சாதாரணமாகவே கைவந்திருந்த சமயம் அது.

மோதிக்கொண்டிருந்த இரண்டு தரப்புகளையும் பேச்சு மேசைக்கு இணங்க வைக்கும் கைங்கரியத்தை எவ்வளவு நுட்பமாகவும், நேர்மைத் திறனுடனும் செய்ய வேண்டும் என்பதை வாசகர்கள் உணர்ந்து கொள்ளக் கூடியதாக இருக்கும்.

2006க்கும் 2008க்கும் இடைப்பட்ட காலகட்டத்தில் இரண்டு தரப்புகளையுமே சீற்றமுற வைக்காமல் – எனக்கு எதிராகத் திரும்பச் செய்யாமல் – அதை நான் செவ்வனே செய்தேன் என்ற திருப்தி எனக்கு உண்டு.

ஆனாலும் 2009 இல் ஒரு தரப்பின் வன்முறை எனக்கு எதிராகத் திரும்பியது. நான் ஆயுத முனையில் கடத்தப்பட்டேன். மிக மேசமாக நடத்தப்பட்டேன். அவை எல்லாம் முடிந்த காரியம்.

ஆனால், என்னைக் கடத்தி சித்திரவதை செய்த தரப்புடன் எந்த சமரச முயற்சியிலும் அச்சமயம் நான் ஈடுபடவில்லை. யுத்தத்தில் ஈடுபட்ட ஒரு தரப்புக்கும் பிறிதொரு சர்வதேச தரப்புக்கும் இடையில் நான் தொடர்பாளராகச் சம்பந்தப்பட்டிருக்கிறேன் என்ற சந்தேசத்தில்தான் அந்த வன்முறை எனக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்டது. அதனால்தான் யுத்தம் முடியும் வரை நான் தடுப்புக் காவலில் வாட வேண்டியதாயிற்று.

இதை ஏன் இப்போது குறிப்பிடுகின்றேன் என்றால், இடைத் தொடர்பாளராக – இணக்கம் ஏற்படுத்தும் ஆளாக – செயற்படுவது என்பது மிகவும் கவனமாகவும் நுணுக்கமாகவும் முன்னெடுக்கப்பட வேண்டிய பணி.

அதை நான் சரியாக ஆற்றியமையால்தான் இன்றும் எனக்கு ஊடகத்துறையில் ஒரு மரியாதை இருப்பதாக நான் கருதுகிறேன்.

நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரனுக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமாருக்கும் இடையில் சமரசம் செய்ய முயன்றவர் எல்லாவற்றையும் போட்டுடைத்து விட்டார் எனத் தெரிகின்றது.

ஆஸ்திரேலியாவில் இருந்து வந்த ஒரு புத்திஜீவியே இந்த சமரச முயற்சியை முன்னெடுத்தவர்.

ஏதோ காரணங்கள் மற்றும் உறுதி மொழிகளைக் கொடுத்து நேற்று மாலை 4 மணிக்கு இரு தரப்புச் சந்திப்புக்கு அவர் ஒழுங்கு செய்திருந்தார். கடைசி நேரத்தில் சந்திப்பு ரத்துச் செய்யப்பட்டது.

உத்தேச புதிய கூட்டணியில், ஈ.பி.ஆர்.எல்.எவ், ரெலோ, புளொட் ஆகிய மூன்றையும் சேர்ப்பதில்லை என்ற உறுதிமொழியுடன் விக்னேஸ்வரன் ஐயா சமரசப் பேச்சுக்கு முன் வருகின்றார் என கஜேந்திரகுமார் தரப்புக்கு ஏற்பாட்டாளரான அந்த புத்திஜீவி வாக்குறுதி கொடுத்திருக்கின்றார்.

ஆனால் அத்தகைய உறுதி மொழி எதுவும் தாம் தரவில்லை என்ற தமது நிலைப்பாட்டை விக்னேஸ்வரன் வெளிப்படுத்த, சந்திப்பு ரத் தாகிவிட்டது.

இனிமேல் இணக்கத்துக்காக இந்த இரு தரப்புகளும் சந்திப்பதற்கு வாய்ப்பே இல்லை எனத் தெரிகின்றது.

கஜேந்திரகுமார் அணி கேட்பது போல ஈ.பி.ஆர்.எல்.எவ், புளொட், ரெலோவை புதிய கூட்டில் சேர்ப்பதில்லை என்ற வாக்குறுதியை வழங்க விக்கியின் தமிழ் மக்கள் கூட்டணி தயாரில்லை.

அது இனி இப்போதைக்கு நடக்கவே மாட்டாது என்பதும் உறுதி.

அதற்கு மேலும் ஒரு விடயம் உண்டு. சமரசத்துக்கு இணைப்பாளராகச் செயற்பட முயற்சித்த அந்த புகலிடப் புத்திஜீவி, உத்தேச சந்திப்பு ரத்துச் செய்யப்பட்டமை குறித்து கஜேந்திரகுமாருக்கு ஒரு குறும் தகவல் அனுப்பியிருக்கின்றார்.

அதில், விடயத்தில் சம்பந்தப்பட்ட ஒரு தரப்பான நீதியரசர் விக்னேஸ்வரன் குறித்து அந்த சமரச ஏற்பாட்டாளர் காரமாகக் குறிப்பிட்டிருக்கின்றார்.

"அவர் (விக்னேஸ்வரன்) மிக மோசமாக எனக்குத் துரோகம் செய்து ஏமாற்றியுள்ளார் ஆனால் நான் அவருக்கு ஒரு பாடம் படிப்பிப்பேன்." – என்று முதல்வர் விக்கியை வைதிருக்கின்றாராம் அவர்.

சம்பந்தப்பட்ட இரண்டு தரப்புகளுக்கு இடையில் சமரசம் செய்யப் போகின்றவர் இப்படி ஒரு தரப்புக் குறித்துத் தூற்றுவாராயின் அவர் சமரச முயற்சிக்கே லாயக்கற்றவர் என்பதுதான் எனது கருத்து. நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள் வாசகர்களே?

- மின்னல் -

காலைக்கதிர் Kalaikathir



# மண் அகழ்வை உடன் தடுத்து நிறுத்துங்கள் மணற்காட்டைப் பாதுகாக்க முன்வாருங்கள்!

## யாழ். மாவட்ட அரச அதிபருக்கு கிராம மக்கள் அவசர கடிதம்

**யாழ்ப்பாணம், ஜுலை 09 வடமராட்சி கிழக்கு, மணற்காடு கிராமத்தைப் பெரும் அனர்த்தங்களில் இருந்து பாதுகாக்கும் பொருட்டும் எதிர்கால சந்ததியின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கிலும் இங்கு இடம் பெறும் மண் அகழ்வு நடவடிக்கைகளை உடன் தடை செய்யுங்கள்.**

– இவ்வாறு வலியுறுத்தி யாழ்.மாவட்ட அரச அதிபருக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளனர் மணற்காடு கிராம மக்கள்.

07.07.2019 எனத் திகதியிடப்பட்டு பெரும் அனர்த்தங்களிலிருந்து கிராமத்தைப் பாதுகாத்தல்' என்ற தலைப்பில் எழுதப்பட்டுள்ள அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: –

மணற்காடு கிராமம் பல மணல் மேடுகளால் சூழப்பட்டிருந்தது. மணல் பெருக்கத்தால் கிராமத்தின் ஆலயம், குடிசைகள் என்பன மணலால் மூடப்பட்டன. இதனைத் தடுக்கும் முகமாக 1970ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் பா.துரைரத்தினத்தால் சவுக்கங்கன்றுகள், சஞ்சீவி மரங்கள் என்பன நடப்பட்டன. இதன் காரணமாக காலப்போக்கில் கிராமத்தைச் சூழவுள்ள பகுதிகளில் மண் நகர்வின் தாக்கம் மட்டுப்படுத்தப்பட்டது.

இக்காலப் பகுதியில் வரையறையின்றி மணல் அகழ்வுகளும் மேற்கொள்ளப்பட்டன. இதன் காரணமாக மணல் மேடுகள் அழிவடைந்தன. 2004ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஆழிப்பேரலை (சுனாமி) அனர்த்தத்தால் இக்கிராமம் முற்றாக அழிவடைந்ததுடன் 72 உயிர்களும் காவுகொள்ளப்பட்டன. இதற்குப் பிரதான காரணம் இக்கிராமத்தில் மேற்கொள்ளப்பட்ட மண் அகழ்வே ஆகும்.

சுனாமிக்குப் பின்னராக அமைக்கப்பட்ட குடியிருப்புகளும் கடல் மட்டத்திலிருந்து 5 அடி பள்ளத்திலேயே உள்ளன. மழைக் காலங்களில் வீடுகளில் மழை வெள்ளம் புகுந்து மக்களை அசௌகரியத்துக்கு உள்ளாக்குகின்றது. தொடர்ந்தும் மணல் அகழ்வுகள் மேற்கொள்ளப்படுமாயின் எதிர்வரும் காலங்களில் பெரும் அனர்த்தங்களை எதிர்நோக்க வேண்டிய சாத்தியக்கூறுகள் உள்ளன.

எனவே, இக்கிராமத்தைப் பெரும் அனர்த்தங்களில் இருந்து பாதுகாக்கும் பொருட்டும் எதிர்கால சந்ததியின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கிலும் இவ்விண்ணப்பத்தைப் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளுக்கும் சமூக அக்கறையுள்ள ஆன்மீகத் தலைவர்களுக்கும் விடுப்பதோடு எமது கிராம மக்களின் அவசர வேண்டுதலைப் பதிவு செய்து மண் அகழ்வு நடவடிக்கைகளை உடன் தடை செய்துதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம் – என்றுள்ளது.

இந்தக் கடிதத்தின் பிரதிகள் வடமராட்சி கிழக்கு (மருதங்கேணி) பிரதேச செயலர், பருத்தித்துறை பிரதேச சபை தவிசாளர், வடக்கு மாகாண ஆளுநர், அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் யாழ். மாவட்டப் பணிப்பாளர், வன ஜீவராசிகள் திணைக்களத்தின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர், யாழ்.மாவட்ட சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபை, மணற்காடு கிராமசேவையாளர், யாழ். மறைமாவட்ட ஆயர், மணற்காடு பங்குத்தந்தை மற்றும் பருத்தித்துறை மறைக்கோட்ட குரு முதல்வர் ஆகியோருக்கு அனுப்பப்பட்டுள்ளன. (ஐ)

# அதிநவீன கண்காணிப்பு விமானம் கொழும்பில்!




கொழும்பு, ஜுலை 09

அதிநவீன தொழில்நுட்ப வசதிகளைக் கொண்ட விமானம் ஒன்று கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டுள்ளதாக விமான நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த விமானம் 1000 மீற்றர் உயரத்தில் இருந்து நிலத்தை துல்லியமாகவும் மேலோட்டமாகவும் படம் பிடிக்கக்கூடியது. 3 நாள்கள் பயணத் திட்டத்துக்காக இந்த விமானம் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டுள்ளதாகச் சிவில் விமான சேவைகள் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இந்தோனேசியாவில் இருந்து இலங்கைக்கு வந்துள்ள இந்த விமானம் இன்று இந்தியா நோக்கிச் செல்லவுள்ளது. இந்தியாவுக்குச் செல்லவுள்ள விமானத்தின் பயணப்பாதை இலங்கை வழியாக திட்டமிடப்பட்டுள்ளமை அடுத்து அந்த விமானம் நேற்று முன்தினம் இங்கு தரையிறங்கியுள்ளது.

எனினும் அந்த விமானத்தின் வருகை தொடர்பில் தாம் அறிந்திருக்கவில்லை எனவும், நாட்டில் எவ்வித கண்காணிப்பு நடவடிக்கைக்கும் அனுமதி வழங்கப்படவில்லை எனவும் புவிசரிதவியல் அளவை மற்றும் சுரங்க பணியகம் தெரிவித்துள்ளது. (ஐ)

# மைத்திரிக்கு மீண்டும் அதே பதிலையே உயர்நீதிமன்றம் நிச்சயமாக வழங்கும்!

## அடித்துக் கூறுகின்றார் லக்ஷ்மன் கிரியெல்ல

கொழும்பு, ஜுலை 09

ஜனாதிபதியின் பதவிக்காலம் தொடர்பில் உயர்நீதிமன்றம் ஏற்கனவே தீர்ப்பு வழங்கியுள்ள நிலையில் மீண்டும் பதவிக் காலம் குறித்து வினவச் சென்றாலும் அதே பதிலையே உயர்நீதிமன்றம் வழங்கும் என்று சபை முதல்வர் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

தனது பதவிக் காலம் தொடர்பாக உயர்நீதிமன்றத்தின் வியாக்கியானத்தைக் கோர ஜனாதிபதி தயாராகிறார் எனத் தெரிவிக்கப்படும் செய்தி குறித்து ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அவர் ,



இலங்கையானது சிங்கள பௌத்த நாடு என்பதை போன்று ஏனைய இன,மத மக்களும் ஒற்றுமையாக வாழும் நாடாகும். சமகால அரசு அனைத்து இன மக்களுக்கும் சுதந்திரத்தையும், சந்தர்ப்பத்தையும் வழங்கிச் செயற்படுகிறது. வரலாற்றைப் புரட்டிப்பார்த்தால் இது தெளிவாகும் , அநுராதபுர யுகத்திலிருந்து கண்டி மன்னராட்சி யுகம்வரை பௌத்த மதத்திற்கே முன்னுரிமையளிக்கப்பட்டுள்ளது.

முடிசூடுவதற்கும், ஆட்சியைக்கொண்டு செல்வதற்கும் பௌத்த மதம் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்பட்டது. இனத்தைவிட மதத்திற்கே முன்னுரிமை பெற்றுக்கொடுக்கப்பட்டிருந்தது. அதேபோன்று அனைத்தின மக்களும் சமமாக நடத்தப்பட்டனர். நாங்கள் அன்று பாடசாலைகளில் கற்ற வரலாறுகள் இன்று கற்பிக்கப்படுவதில்லை. அது பெரும் குறைபாடாகும்.

ஒல்லாந்து நாட்டவர்களிடமிருந்து முஸ்லிம் மக்களை காப்பாற்றி கிழக்கு மாகாணத்தில் குடியமர்த்தியது சேனாரத் மன்னர்தான் என்பது எமது பிள்ளைகளுக்குத் தெரியாது. அவ்வாறுதான் எமது மன்னர்கள் நாட்டின் அனைத்து மக்களையும் பாதுகாத்திருந்தனர். அதே போன்றுதான் கடந்தகால அரசுகளும் அனைத்தின மக்களையும் பாதுகாத்திருந்தன. நாமும் நாட்டின் எதிர்காலத்துக்காக இந்தச் செயற்பாட்டை முன்னோக்கிக் கொண்டுசெல்ல அர்ப்பணிப்புடன் செயற்படுவோம் – என்றார். (ஐ)

# யாழ். பஸ் சாரதியிடம் கப்பம் கோரிய இரண்டு பேர் கைது!

யாழ்ப்பாணம் – கொழும்பு தனியார் பஸ் சாரதி ஒருவரைக் மிரட்டி கப்பம் கோரிய குற்றஞ்சாட்டில் தேடப்பட்டுவந்த இரு சந்தேக நபர்கள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை கொட்டாஞ்சேனை பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.


இம்மாதம் முதலாம் திகதி இந்தச் சந்தேகநபர்கள் இருவரும் யாழ்ப்பாணம் – கொழும்புக்கான தனியார் பஸ் சாரதியிடம் கப்பம் கோரி அச்சுறுத்தியுள்ளனர்.

அச்சுறுத்தல் தொடர்பாக பஸ் சாரதி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்தார். இதையடுத்து விசாரணையில் இறங்கிய பொலிஸார், இருவரைக் கைது செய்துள்ளனர். அவர்களிடமிருந்து இரு ஓட்டோக்களும் தொலைபேசியொன்றும் மீட்கப்பட்டுள்ளன. (ஐ)

# சுற்றாடல் பாதுகாப்பு விழிப்புணர்வு செயற் திட்டம் நேற்று கிளிநொச்சியில்







கிளிநொச்சி, ஜுலை 09

சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வுச் செயற் திட்டம் கிளிநொச்சி மகாவித்தியாலய மாணவர்களால் முன்னெடுக்கப்பட்டது.

நேற்றுத் திங்கட்கிழமை காலை 7 மணி முதல் இந்தச் செயற் திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

'நாமே போட்டோம் நாமே சேகரிப்போம்' எனும் தொனிப்பொருளில் பாடசாலை மாணவர்கள் மற்றும் மக்கள் மத்தியில் சுற்றாடல் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இந்தச் செயற்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பாடசாலை வளாகம் மற்றும் கிளிநொச்சி நகரின் ஏ – 9 வீதியின் டிப்போ சந்தி முதல் கரடிபோக்கு சந்தி வரையாக இரு மருங்கிலும் உள்ள உக்காத பொருள்கள் இதன்போது பாதுகாப்பான முறையில் அகற்றப்பட்டன. சுமார் 1 மணிநேரம் இந்தச் செயற் திட்டம் பாடசாலை மாணவர்களால் முன்னெடுக்கப்பட்டது.

கிளிநொச்சி மகாவித்தியாலய சாரணிய மாணவர்கள் மற்றும் பெண் சாரணியர்கள் 120 பேரினது பங்களிப்புடன் நேற்று இந்தச் செயற் திட்டம் நடைபெற்றது. (ஐ)

## நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

# வேதம் ஓதும் சாத்தான்

முன்னுக்குப் பின் முரணாகவும், சர்ச்சைக்குரிய விதத்திலும் கருத்து வெளியிட்டிருக்கின்றார் பொதுபலசேனவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர்.

பௌத்த, சிங்களப் பேரினவாதத்தின் உச்சியில் நின்று அவர் ஆற்றியிருக்கின்ற உரையைப் பார்க்கும்போது, நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் சிறையில் இருந்த அவரை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தமக்குள்ள விசேட அதிகாரத்தைப் பயன்படுத்தி, பொது மன்னிப்பு அளித்து விடுவித்தமை, கழநாயை அவிழ்த்து விட்ட செயலுக்கு ஒப்பானது எனக் கூட்டமைப்புப் பேச்சாளரான எம்.ஏ.சுமந்திரன் எம்.பி. கூறியமை முற்றிலும் சரியானது என்றே தோன்றுகின்றது.

மதம் மற்றும் இனங்களை அடிப்படையாகக் கொண்டு செயற்படும் அனைத்து அரசியல் கட்சிகளும் பகிரங்கமாக இரத்துச் செய்யப்பட வேண்டும் என்றும் –

மத அடிப்படை வாத அமைப்புகள் எந்தவித நிபந்தனையுமின்றி தடை செய்யப்பட வேண்டும் என்றும் –

அவரே கோருகின்றமை விநோதமானது.

ஏனெனில் அந்த வகையில் பார்த்தால் முதலில் தடை செய்யப்பட வேண்டிய இயக்கம் அவரது பொதுபலசேனா தான்.

மத அடிப்படைவாத அமைப்புக்களினால் ஏற்படக் கூடிய பாதிப்புகள், ஆபத்துக்கள் குறித்து அவர் பேசுகின்றமை சாத்தான் வேதம் ஓதுவதற்கு ஒப்பானதாகும்.

அதேசமயம் மதவாதம், இனவாதம் குறித்தும் கண்டியில் நடைபெற்ற தமது பொதுபல சேனாவின் மாநாட்டில் அவர் பிரஸ்தாபித்திருக்கின்றார்.

*"மதவாதம், இனவாதம் ஆகியவற்றை முழுமையாக துடைத்தெறிய வேண்டுமாயின் 'இனங்கள் ஒரு சக்கரம்' என்ற கொள்கையின் கீழ் ஒன்றுபடவேண்டும். இலங்கையர் என்ற நிலைப்பாட்டில் இருந்தால் மாத்திரமே மதவாத தீவிரவாதத்தை வெற்றி கொள்ள முடியும் "* – என்றும் அவர் கூறுகின்றார்.

அவர் கூறும் மேற்படி கருத்துக்களைப் பார்த்தால் –

மதகுரோதங்களை ஏற்படுத்தி, மதவாதம் மற்றும் இனவாதத்தை ஸ்திரப்படுத்தும் அமைப்புகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டுமாயின், அதற்கான முதல் நடவடிக்கை மேற்படி கலகொட அத்த ஞானசார தேரரின் பொதுபலசேனாவிலிருந்துதான் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

பேரினவாதத்தின் உச்சமாக இன்று நாட்டில் விளங்குவது அதுதான். இனக்குரோதம், மதவெறி வன்முறை ஆகியவற்றுக்குத் தூபமிடும் மையப் புள்ளியாக அதுவே இருக்கிறது.

காருண்யசீலர் கௌதம புத்தபிரான் போதித்த தார்மீகத்துக்கு – பொறுமைக்கு – சகிப்புத் தன்மைக்கு – சமரச சன்மார்க்கத்துக்கு – முற்றிலும் மாறாக இனவெறிப் போக்கில் இன்றும் இங்கு செயற்பட்டுக் கொண்டிருப்பது அவரின் பொதுபலசேனாதான்.

தீவிரப் போக்கு மதவாத அமைப்புகளுக்கு எதிரான நடவடிக்கை என்றால் உண்மையில் அது, பொதுபல சேனாவிலிருந்துதான் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

இலங்கைத் தீவில் 2500 ஆண்டு கால வரலாற்றைக் கொண்ட சிங்கள இனம் குறித்துப் பேசும் பொதுபலசேனாவின் பொதுச் செயலாளர், இந்தத் தீவில் தமிழரின் பாரம்பரிய வேரோடல் இந்த 2500 வருடங்களுக்கும் முற்பட்டது என்பதை ஏன் கவனத்தில் கொள்ளவில்லை? கவனத்தில் கொள்ள மறுக்கின்றார்?

இலங்கையின் தேசிய மற்றும் மரபுரிமையை நிர்மாணித்த சிங்களவர்கள் 'பூமி புத்திரர்களாக' அடையாளப்படுத்தப்பட வேண்டும் என்றும் அவர் கோருகின்றார்.

பௌத்த, சிங்களத்துக்குப் பதிலாக – அதற்கு மாற்றாக – இந்த இலங்கைத் தீவில் ஒரு பண்பட்ட நாகரிகக் கட்டமைப்புடன் தமிழர் தேசம் – சிங்களவர்களின் எழுச்சிக்கு முன்பிருந்தே – இந்தத் தீவில் நிலைகொண்டிருந்தது என்ற உண்மையை மறந்து பேசுகின்றார் கலகொட அத்தே ஞானசாரதேரர்.

குற்றச்சாட்டுக்காக ஒரு சுட்டுவிரலை எதிரில் இருப்பவரை நோக்கி நீட்டும் போது மற்றைய மூன்று விரல்கள் உங்களை நோக்கித் திரும்புகின்றன என்பதை ஞானசாரர் மறந்து விட்டார் போலும்.

இந்த இலங்கைத் தீவு, இங்கு காலாதிகாலமாக வசிக்கும் பிற இன, பிற மொழி, பிற மத மக்களுக்கும் உரியது என்ற உண்மையை தமது பேரினவாத மேலாண்மைத் திமிர்ச் சிந்தனையிலிருந்து வெளியே வந்து நோக்குவதற்கு ஞானசாரர் போன்றோர் வேண்டுமென்றே பிடிவாதம் பிடித்து மறுப்பார்களாயின், இந்தத் தீவில் இன்னும் இரத்த ஆறு மோசமாக ஓடுவது தவிர்க்க முடியாததாகத் தான் இருக்கும்.

# உண்மைத் தாற்பரியத்தை எடுத்தியம்பும் மனித உரிமை கண்காணிப்பக அறிக்கை

## வரவேற்கின்றார் கிழக்கு முன்னாள் முதல்வர் நஸீர்

கொழும்பு, ஜூலை 09

**முஸ்லிம்கள் கண்மூடித்தனமாகக் கைதுசெய்யப்படுகின்றமை உட்பட அவர்களுக்கு எதிரான அனைத்து துஷ்பிரயோகங்களையும் இலங்கை அரசு முடிவுக்குக் கொண்டு வரவேண்டுமென சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் வேண்டுகோள் விடுத்துள்ளமை வரவேற்கத்தக்க விடயம். தற்போதைய சூழ்நிலையின் உண்மையான தாற்பரியத்தை இந்த அறிக்கை கோடிட்டு காட்டியுள்ளமை பாராட்டுக்குரியது.**

– இவ்வாறு தெரிவித்துள்ளார் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நஸீர் அஹமட்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பின்னர் பௌத்த தேசியவாதிகளால் முஸ்லிம்களின் அடிப்படை உரிமைகளை மீறும் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளமை குறித்தும், அவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களும் ஏனைய துஷ்பிரயோகங்கள் குறித்தும் சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துடன், முஸ்லிம்களுக்கு எதிராக இடம்பெறும் கும்பல்களின் வன்முறைகள், அந்தச் சமூகத்தினருக்கு எதிரான அச்சுறுத்தல்கள், ஒடுக்கு முறைகள் குறித்து அரச அதிகாரிகள் துரிதமாக முடிவைக் காண வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளது.

அத்தோடு பெருமளவானவர்கள் அரசு தான் நீக்குவதாக



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கு வாக்குறுதியளித்த பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழேயே தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துடன், இலங்கை அரசு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் எனவும், மனித உரிமை துஷ்பிரயோகங்களை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் எனவும் சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் வலியுறுத்தியிருப்பது முஸ்லிம் மக்களுக்கு ஆறுதலைத் தந்துள்ளது.

எனவே, மேற்குறிப்பிட்ட விடயங்களில் அரசு முழுமையாக கவனம் செலுத்த வேண்டும் என்பதை நாமும் வலியுறுத்த விரும்புகின்றோம்.

தொடர்ந்தும் இனவாத சக்திகளின் நெருக்குவாரங்கள் அதிகரித்த வண்ணமே இருக்கின்றன. இதனைக் கட்டுப்படுத்த அரசு துரித நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நாட்டில் அவசரகாலச் சட்டம் அமுலில் இருக்கின்றபோதும் இனக்குரோதங்களைத் தூண்டும் செயற்பாடுகள் தொடர்ந்த வண்ணம் இருக்கின்றன. முதலில் இவற்றை நிறுத்த ஆரோக்கியமான நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும்.

'பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டும்' நோக்கோடு அரசு செயற்படுகின்றதா என்ற எண்ணம் தற்போது முஸ்லிம் சமூகத்தின் மனங்களில் ஏற்பட்டு வருகின்றது. இந்த எண்ணத்தை நீக்க அரசு துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் – என்றுள்ளது. (ஐ)

# ஜனாதிபதியின் அக்கறையின்மையே குண்டுத் தாக்குதல்களுக்கு காரணம்

## சிறிநேசன் எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 09

பாதுகாப்பு விடயத்தில் ஜனாதிபதியின் போதிய அக்கறையின்மையே தற்கொலைக் குண்டுத்தாக்குதலுக்குப் பிரதான காரணம் என மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து சிறிநேசன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டம் மண்டூரில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே, அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்–

இன்று ஊடகங்களில் பேசுபொருளாக இருக்கின்ற மரண தண்டனை விடயத்திற்கு ஜனாதிபதி அனுமதியளித்திருக்கிறார். அதேவேளை மரண தண்டனை இடம்பெறக் கூடாதென்று 12 சிவில் வழக்குகள் தொடுக்கப்பட்டிருக்கின்றன.

மரண தண்டனை போதுமானதா அல்லது சீர்திருத்த தண்டனை தேவையா, ஆயுள் தண்டனையாகத்தான் அமையவேண்டுமா என்ற கேள்வி எழுகின்றது. ஜனாதிபதியின் இந்தப் பரீட்சையில் யார் வெல்லப்போகின்றார்கள் என்பது நீதிமன்றத் தீர்ப்பில்தான் இருக்கின்றது.

கடந்த உயிர்த்த ஞாயிறு தற்கொலைத் தாக்குதலின் பின் பொலிஸ்மா அதிபர் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆகியோரை உடனடியாகப் பதவி விலகப் பணித்திருந்தார். இதன்பின் கட்டாய விடுப்பும் கைதும் இடம்பெற்று அவர்கள் சிறையிலடைக்கப்பட்டனர்.

கடந்த காலத்தில் பாதுகாப்பில் காணப்பட்ட பெரிய ஓட்டை காரணமாக மனித குண்டு வெடிப்பில் 250 இற்கும் மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

இதில் யார் குற்றம்செய்திருக்கிறார் என்ற விடயம் தொடர்பாக ஜனாதிபதிக்கும் பாதுகாப்புச் செயலாளருக்கும், ஜனாதிபதிக்கும் பொலிஸ்மா அதிபருக்கும் இடையே பலத்த போட்டிகள் நிலவுகின்றன.

பிரதமர், பொலிஸ்மா அதிபர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆகியோர் பாதுகாப்பு சம்பந்தமான கூட்டத்தில் கலந்துகொள்ளக்கூடாது எனப் பல தடவை ஜனாதிபதி கூறியதன் காரணமாகவே இந்தக் கோரச் சம்பவம் இடம்பெற்றிருக்கிறது.

பாதுகாப்பு விடயத்தில் ஜனாதிபதிக்கு போதிய அக்க றையின்மையே தற்கொலைக் குண்டுத்தாக்குதலுக்குப் பிரதான காரணம். ஜனாதிபதி,



பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர், பிரதமர், பொலிஸ்மா அதிபர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆகியோர் இல்லாது இடம்பெறும் பாதுகாப்புக் கூட்டத் தொடரே நாட்டில் இடம்பெற்ற பயங்கரவாத தாக்குதலுக்குப் பிரதான காரணியாக கருதவேண்டியுள்ளது – என்றார். (ஐ)

### நாளை

10.07.2019
புதன்கிழமை
நட்சத்திரம்: சித்திரை மு.இ. 8.28 வரை
திதி : அட்டமி கா.7.35 வரை
இராகுகாலம் : 11.58 – 1.28
சுப நேரம் : 4.28 – 5.58

இப்போது யாழ்ப்பாணத்தில் வெளியாகி, வடக்கு, கிழக்கில் மட்டுமல்லாமல் கொழும்பிலும் இலங்கையின் பிற இடங்களிலும், புலம் பெயர் தேசங்கள் எங்ஙனும் இலங்கை நேரப் படி அதி காலையில் தினசரி தவறாமல் நாளிதழ் வடிவத்தில் தமிழ் மக்களை எட்டும் ஒரே பத்திரிகை

காலைக்கதிர் Kalaikathir

'வட்ஸ் - அப்', 'வைபர்', மின்னஞ்சல் மூலம் 'காலைக்கதிர்' நாளிதழை தினசரி இலவசமாகப் பெற்றுக் கொள்வதற்குத் தொடர்பு கொண்ட பல்லாயிரம் வாசகர்களுக்கு அணிகள் அணிகளாகப் பிரித்து அதிகாலையிலேயே அஞ்சல் செய்து வருகிறோம். விண்ணப்பித்து அவற்றைப் பெற்றுக்கொள்ளாதோர் அல்லது புதிதாகப் பெற்றுக்கொள்ள விரும்புவோர்

kalaikkathirpaper@gmail.com
என்ற மின்னஞ்சல் மூலம்
அல்லது




0094 - 21 - 222 3000
என்ற தொலைபேசி இலக்கம் மூலம் தொடர்பு கொள்ளலாம்.

புலம்பெயர் தேசத்தில் உள்ள பல்லாயிரம் தமிழ் மக்களையும் உங்கள் 'காலைக்கதிர்' தினசரி அதிகாலை வேளையிலேயே தவறா மல் நாளிதழ் வடிவத்தில் எட்டுவதால், மரண அறி வித்தல், நினைவஞ்சலி உட்பட பிற விளம்பரங்களை மிகக் குறைந்த கட்டணத்தில் பிரசுரிக்க காலைக்கதிரை நீங்கள் நாடலாம்.

விளம்பரத் தொடர்புகளுக்கு
முகாமையாளர், 'காலைக்கதிர்'
தொலைபேசி இலக்கம்
0094 - 21 - 222 3000
0094 - 776687760

# அரசியலில் இருந்து ஓய்வு பெறும் மங்கள



கொழும்பு, ஜூலை 09

இன்னும் ஐந்தாண்டுகள் மாத்திரமே செயற்பாட்டு அரசியலில் ஈடுபடுவேன். அதன்பின்னர் அரசியலிலிருந்து ஓய்வுபெறுவேன். - என்று நிதி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

மாத்தறையில் நேற்று முந்தினம் நடைபெற்ற புத்தக வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இறுதிமூச்சு உள்ளவரை அரசியல் களத்தில் இருக்கவேண்டும் என நான் விரும்பவில்லை. விடைகொடுக்கவேண்டிய நேரம்வரும்போது கௌரவமாக வெளியேறவே எதிர்பார்க்கின்றேன்.

அந்தவகையில் தற்போது 60 வயதாகின்றது. இன்னும் ஐந்து ஆண்டுகள் என்னால் அரசியலில் ஈடுபடமுடியும். எனவே, நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் நிச்சயம் போட்டியிடுவேன். அதுவே நான் போட்டியிடும் இறுதி தேர்தலாக அமையும் - என்றார். (ஐ)

# மக்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதமே இல்லை!

**கொழும்பு, ஜூலை 09**
**நாட்டில் வாழ்கின்ற அனைத்து இன மக்களின் பாதுகாப்புக்கும் உத்தரவாதம் இல்லாத நிலைமை தற்போது ஏற்பட்டுள்ளதென எதிர்க் கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

## அரசைச் சாடுகின்றார் மஹிந்த ராஜபக்ஷ



குருநாகலில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே மஹிந்த இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

தங்களுடைய இனத்துக்கு பாதுகாப்பு இல்லை என முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த சகோதரர் என்னிடம் கூறினார்,

உண்மையாகவே நாட்டில் தற்போது சிங்கள், தமிழ், முஸ்லிம், கிறிஸ்தவம் என அனைத்து மக்களும் பாதுகாப்பு அச்சுறுத்தலுக்கு முகம்கொடுத்துள்ளனர்.

ஆனால் அரசு தொடர் குண்டுத் தாக்குதலுடன் தொடர்புடைய அனைத்துச் சந்தேகநபர்களையும் கைது செய்து விட்டோம், இனி எந்தவொரு பிரச்சினையும் இல்லையெனக் கூறுகின்றது.

ஆனால்ஊடகங்களில்பயங்கரவாதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தொடர்ந்து செய்திகள் வெளியாகிய வண்ணமே உள்ளன.

இந்நிலையில் அரசு என்ன செயற்பாட்டை முன்னெடுத்து வருகின்றது. நாட்டுக்குப் பொருத்தமற்ற சோபா உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதுடன் நாட்டை விற்பனை செய்யும் நடவடிக்கையையே மேற்கொண்டு வருகின்றது. ஆனால் ஜனாதிபதி, அவ்வாறு செய்ய ஒருபோதும் அனுமதியளிக்க மாட்டேன் என்கிறார்.

எவ்வாறாயினும் பொறுப்பற்ற விதமாகச் செயற்படும் இந்த அரசு இனி ஆட்சியில் இருக்கக்கூடாது – என்றார். (ஐ)

# ஜே.வி.பியின் பிரேரணையை வெல்வோம்!

## சூளுரைக்கின்றது அரசு



கொழும்பு, ஜூலை 09

மக்கள் விடுதலை முன்னணியால் முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையை தோற்கடிக்க நடவடிக்கை எடுக்கப்படும். – என்று சபை முதல்வரும், அமைச்சருமான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

அரசுக்கு எதிராக மக்கள் விடுதலை முன்னணியால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை மீது 11 ஆம் திகதி மாலை வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது.

இந்நிலையில் இந்தப் பிரேரணையைத் தோற்கடிப்பதற்கான சாதாரண பெரும்பான்மையை அரசு கொண்டுள்ளதா என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே சபை முதல்வர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிராக வாக்களிக்கப்படும் என ஐக்கிய தேசிய முன்னணியில் அங்கம் வகிக்கும் பங்காளிக்கட்சிகள் உறுதியளித்துள்ளன. கூட்டமைப்பின் ஆதரவும்கிடைக்கும்.எனவே, எமது தரப்புக்கே வெற்றி உறுதி –என்றார்

# மின்தடை

யாழ்ப்பாணம், ஜூலை 09

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை–

**யாழ் பிரதேசத்தில்-**

பொன்னாலை கிருஷ்ணன் கோவிலடி, பொன்னாலை கொலனி, காரை நகர்ப்பிரதேசம், காரைநகர் கடற்படை முகாம், காரை நகர் விடுதி, கூல் மென் ஐஸ் தொழிற்சாலை, Ceynor Foundation Ltdஆகிய இடங்களிலும்–

**கிளிநொச்சி பிரதேசத்தில் –**

கேப்பாபிலவு, 59வது படைப்பிரிவு 14 ESR 1, 1, 59வது படைப்பிரிவு 14 ESR II நந்திக்கடல், 114 ESR II, 16 ESR நந்திக்கடல், 6 SLASC நந்திக்கடல் 11 Field Engineer ஆகிய பிரதேசங்களிலும்,மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

# 10 விடுதிகள் மூடப்பட்டன!

கொழும்பு, ஜூலை 09

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் பின்னர் சுற்றுலாப் பயணிகளின் குறைவடைந்துள்ளமையினால் 10 அதிக சொகுசு விடுதிகள் மூடப்பட்டுள்ளன என இலங்கை விடுதிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

ஏப்ரல் மாதத்தில் நடந்த தீவிரவாதத் தாக்குதலின் பின்னர் பலவிடுதிகள் நெருக்கடிகளுக்குள்ளாகியுள்ளன. அதனால் சில விடுதிகள் மூடப்பட்டுள்ளன.

ஊழியர்களுக்குத் தொடர்ந்தும் சம்பளம் வழங்குவதில் பல்வேறு சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளதாகச் சங்கத்தின் தலைவர் சனத் உக்வத்த தெரிவித்துள்ளார்.

கனடா, பிரிட்டன் போன்ற நாடுகளின் சுற்றுலாப் பயணிகளின் வருகை காணப்பட்டபோதிலும், அவர்களில் அதிமானோர் அந்த நாடுகளில் வாழும் இலங்கையர்கள் எனத் தெரியவந்துள்ளது.

விடுதிகளை இவ்வாறு குறைந்த கட்டணத்தின் கீழ் நடத்திச் செல்ல முடியாது. சில விடுதிகள் தங்களைத் தொடர்ந்தும் தக்கவைத்துக்கொள்ள முயற்சிக்கின்றன. எனினும் அந்த விடுதிகளில் சேவை செய்யும் ஊழியர்களுக்கு உட்பட இலவசமாக உணவுகள் வழங்குவதற்கேனும் முடியாத நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டுள்ளன என அவர் மேலும் கூறினார். (ஐ)

# பூநகரியில் கடும் வறட்சி! 3 426 குடும்பங்கள் பாதிப்பு

கிளிநொச்சி, ஜூலை 09

கிளிநொச்சி பூநகரிப் பிரதேசத்தில் நிலவும் வறட்சி காரணமாக மூவாயிரத்து 426 குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றமையால் பூநகரிப் பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார்.

தற்போது நிலவும் வறட்சி காரணமாக பல்வேறு பகுதிகளிலும் குடிதண்ணீர்த் தட்டுப்பாடு நிலவி வருவதாகவும், பல வாழ்வாதாரத் தொழில்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சி மாவட்டத்தின் தற்போது அதிக வறட்சியினால் பாதிக்கப்பட்ட பகுதியாகப் பூநகரிப்பிரதேசம் காணப்படுகின்றது. குறிப்பாக, இந்தப் பிரதேசத்தில் மக்களுக்கான குடிதண்ணீர்த் தட்டுப்பாடு நிலவுவதுடன், அவர்களது வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நீர் நிலைகள் வற்றிக்காணப்படுகின்றமையால் கால்நடைகள் நீர் தேடி அலைகின்ற நிலைமையும் ஏற்பட்டுள்ளது.

பூநகரிப் பிரதேசத்தில் வறட்சியினால் 491 விவசாயக்குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. தற்போது 2087 குடும்பங்களுக்கு குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. எதிர்வரும் நாள்களில் இந்தத் தொகை அதிகரிப்பதற்கான வாய்ப்புக்கள் உள்ளன.

வறட்சி காரணமாக பூநகரிப் பிரதேசத்தில் இதுவரை 3426 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன எனப் பூநகரிப் பிரதேசத்தின் வறட்சி நிலைமைகள் தொடர்பாக பூநகரிப் பிரதேச செயலாளர் தெரிவித்தார். (ஐ)



# உத்தரப் பிரதேசத்தில் இரட்டைத் தட்டு பஸ் கால்வாயில் கவிழ்ந்ததில் 29 பயணிகள் பலி!



ஆக்ரா,ஜூலை09

உத்தர பிரதேசத்தில் இரட்டைத் தட்டு பஸ் ஒன்று கால்வாயில் கவிழ்ந்ததில் 29 பேர் பலியாகி உள்ளனர்.

உத்தர பிரதேசத்தில் ஆக்ரா நகரில் ஆவாத் டெப்போவில் இருந்து இரண்டடுக்கு கொண்ட பஸ் ஒன்று புறப்பட்டு லக்னோ நகரில் இருந்து புதுடில்லி நோக்கி சென்று கொண்டு இருந்தது.

பஸ்ஸில் 50க்கும் மேற்பட்டோர் பயணம் செய்துள்ளனர். இந்நிலையில், புதுடில்லிக்கு அருகே யமுனா எக்ஸ்பிரஸ் வழிச்சாலையில் கால்வாய் ஒன்றில் நேற்றுக் காலை பஸ் கவிழ்ந்து விபத்திற்குள்ளானது. இதில் 29 பேர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்து உள்ளனர்.

இதுபற்றி தகவல் அறிந்து உடனடியாக சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் மீட்புப் பணிகளை தொடங்கினர். உத்தர பிரதேச முதல் மந்திரி ஆதித்யநாத், பயணிகள் உயிரிழந்தமைக்குத் தனது வருத்தத்தினையும், இரங்கல்களையும் தெரிவித்துள்ளமையுடன், காயமடைந்தோருக்கு அனைத்து மருத்துவ வசதிகளையும் செய்யும்படி உத்தரவிட்டு உள்ளார்.

உத்தர பிரதேச சாலைப் போக்குவரத்துக் கழகம் உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு தலா ரூ.5 லட்சம் இழப்பீடு அறிவித்துள்ளது.







# கர்நாடகா அரசு கவிழ்வது உறுதி பல எம்.எல்.ஏக்கள் பதவி விலகல்



பெங்களூரு,ஜூலை09

கர்நாடகாவில் ராஜினாமா செய்யும் எம்.எல்.ஏக்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருவதால் ஆளும் குமாரசாமி அரசுக்கு சிக்கல் அதிகரித்து வருகிறது.

தற்போதைய மாநில அரசு கவிழ்வது பெரும்பாலும் உறுதியாகி வருகிறது.

கர்நாடகாவில் ஆளும் கூட்டணியைச் சேர்ந்த காங்கிரஸ் மற்றும் மதச்சார்பற்ற ஜனதா தளம் கட்சிகளை சேர்ந்த 13 எம்.எல்.ஏக்கள், சபாநாயகர் ரமேஷ் குமாரை சந்தித்து ராஜினாமாக் கடிதத்தை கொடுத்துள்ளனர்.

இது குறித்து இன்று (ஜூலை 09) தாம் முடிவு செய்ய உள்ளார் என சபாநாயகர் கூறி உள்ளமையால், அதிருப்தி எம்.எல்.ஏக்கள் தற்போது மும்பையில் உள்ள சொகுசு விடுதியில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இருந்தும் அவர்களை சமாதானப்படுத்தி, ராஜினாமாவை திரும்பப் பெற வைக்கும் முயற்சியில் காங். - ம.ஜ.த. ஈடுபட்டுள்ளன.

இதற்கிடையில் அமெரிக்க பயணத்தை இடைநடுவில் முடித்துக் கொண்டு நாடு திரும்பி உள்ள முதல்வர் குமாரசாமி, தேவகவுடா, சித்தராமையா உள்ளிட்ட தலைவர்களுடன் அவசர ஆலோசனையில் ஈடுபட்டுள்ளார். ஒருவேளை 13 எம்.எல்.ஏக்களின் ராஜினாமாவை சபாநாயகர் ஏற்றால், அடுத்த கட்டமாகச் செய்ய வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் காங். - ம.ஜ.த. கட்சிகள் ஆலோசித்து வருகின்றன. பெரும்பான்மையை இழக்கும் நிலை உருவாகி உள்ளது குறித்து கேட்கப்பட்டதற்கு பதிலளித்த சித்தராமையா, அரசுக்கு எந்த ஆபத்தும் இல்லை, பாதுகாப்பாக உள்ளது என்றார்.

மல்லிகார்ஜுன கார்கே கூறுகையில், அதிருப்தி எம்எல்ஏ.,க்களுடன் தொடர்ந்து பேசி வருகிறோம், ஜூலை 12 இல் தெளிவு கிடைத்து விடும். - என்றார்.

பிந்திய செய்தி

# காங்கிரஸின் 21 அமைச்சர்கள் கர்நாடக அரசிலிருந்து விலகல்

பெங்களூரு,ஜூலை09

கர்நாடகா மாநிலத்தில் 21 காங்கிரஸ் மந்திரிகள் தாமாக முன்வந்து தங்களது பதவியை நேற்று ராஜினாமா செய்தனர் என மாநில காங்கிரஸ் தலைவர் சித்தராமையா நேற்றுப் பிற்பகல் குறிப்பிட்டுள்ளார்.

கர்நாடகா மாநிலத்தில் 14 எம்.எல். ஏ.க்களின் ராஜினாமா காரணமாக குழப்பம் நீடித்து வருவதால், குமாரசாமி அரசை காப்பாற்றும் முயற்சியில் காங்கிரஸ், மதச்சார்பற்ற ஜனதா தளம் தலைவர்கள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

இதற்கிடையில், முதல்வர் குமாரசாமி தலைமையிலான மந்திரிசபையில் சிறுதொழில் துறை மந்திரியாக இருந்த சுயேச்சை எம்.எல்.ஏ.நாகேஷ் தனது மந்திரிப் பதவியை நேற்று ராஜினாமாச் செய்தார்.



இந்நிலையில், கர்நாடகா மாநிலத்தில் முதல்வர் குமாரசாமி தலைமையிலான மந்திரிசபையில் காங்கிரஸ் சார்பில் இடம்பெற்றிருந்த 21 மந்திரிகள் தாமாக முன்வந்து தங்களது பதவியை ராஜினாமா செய்தனர் என அம்மாநில சட்டமன்ற காங்கிரஸ் தலைவர் சித்தராமையா நேற்று குறிப்பிட்டுள்ளார்.

துணை முதல் மந்திரி பரமேஸ்வரா வீட்டில் நடந்த ஆலோசனைக்குப் பின்னர் இந்த அறிவிப்பை சித்தராமையா வெளியிட்டார்.




வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் உங்களது தகுதி அடிப்படையில் தொழில் தெரிவு செய்து அனுப்பப்படுவீர்கள்.

நாடுகள் :
கனடா, நியூசிலாந்து, மலேசியா, சிங்கப்பூர்
அரபு நாடுகள் ~
கட்டார், டுபாய், பஹ்ரைன்

வேலை வாய்ப்புகளுக்கு உங்களது தற்குறிப்புக்களை மின்னஞ்சல் மூலமாக அனுப்பவும்.

மின்னஞ்சல் : maruthi.lk@hotmail.com

தொலைபேசி : 0771094086

# ஆப்கனில் கார்க் குண்டுத் தாக்குதல்; பன்னிருவர் உடல் சிதறி உயிரிப்பு

## சமாதானப் பேச்சு நடக்கும் சமயத்திலேயே தலிபான்கள் கைவரிசை

கஜினி,ஜுலை07

ஆப்கானிஸ்தானின் தலிபான் தீவிரவாதிகள் கஜினி நகரத்தில் உளவுபடையினரை குறிவைத்து வெடிகுண்டுகள் நிரப்பிய காரை மோதி வெடிக்க வைத்தனர்.

இந்தக் கார்க் குண்டு வெடிப்பில் 12 பேர் உடல் சிதறி உயிரிழந்தனர். 179 பேர் காயம் அடைந்தனர்.

ஆப்கானிஸ்தானில் 2001ஆம் ஆண்டுதொடங்கி இன்று வரை நடந்து வருகிற போரை முடிவுக்கு கொண்டு வந்து விட வேண்டும் என்பது அமெரிக்காவின் விருப்பம். இதற்காக தலிபான் தீவிரவாத அமைப்பின் பிரதிநிதிகளோடு அமெரிக்க அரசின் பிரதிநிதிகள் நேரடி பேச்சு நடத்தி வருகின்றனர்.


இப்போது கட்டார் நாட்டின் தலைநகரான டோஹாவில் 7ஆவது சுற்றுப் பேச்சு நடந்து வருகிறது. ஆனாலும் போர் நிறுத்தம் செய்ய மாட்டோம் என்று தலிபான்கள் அறிவித்து, தொடர்ந்து தாக்குதல்கள் நடத்தி வருகின்றனர். இந்த நிலையில், நேற்று ஆப்கானிஸ்தானின் கஜினி நகரத்தில் உளவுப்படையினரை குறிவைத்து வெடிகுண்டுகள் நிரப்பிய காரை மோதி வெடிக்க வைத்தனர்.

இந்த தாக்குதல் பற்றிய தகவல் அறிந்ததும் பாதுகாப்பு படையினர் சம்பவ இடத்தை சுற்றி வளைத்தனர். காயம் அடைந்தவர்களை மீட்டு ஆஸ்பத்திரிகளுக்கு அம்புலன்ஸ்களில் அனுப்பி வைத்தனர். இந்தத் தாக்குதலுக்கு தலிபான் தீவிரவாதிகள் பொறுப்பு ஏற்றனர்.

# ஓரினச் சேர்க்கையாளர்கள் பிரிட்டனில் கொண்டாட்டம்

## அரசும் முழு ஆதரவு தெரிவிப்பு












தன்பாலின உறவுக்கான கோரிக்கை எழுந்து 50 ஆண்டுகள் நிறைவடைந்தமையை ஒட்டி இங்கிலாந்தில் கொண்டாட்ட நிகழ்வுகள் நடந்தன.

விமானங்கள் மூலம் வானவில் புகை எழுப்பி அரசும் தனது ஆதரவை நிலைப்படுத்தியது.

ஓரினச்சேர்க்கையாளர்கள், மூன்றாம் பாலினத்தவர் ஆகியோரின் சுதந்திரம், உரிமை போன்றவற்றுக்கு இங்கிலாந்தில் கட்டுப்பாடு கிடையாது.

இதற்கான கோரிக்கை எழுந்து 50 ஆண்டுகள் முடிவடைந்ததைத் தொடர்ந்து லண்டன் நகரில் தன்பாலின ஆதரவாளர்கள் ஆடிப்பாடி மகிழ்ந்தனர். இதற்கான வீதிக் கொண்டாட்டங்களில் 15 லட்சத்துக்கும் மேற்பட்டோர் திரண்டனர். இதற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் இங்கிலாந்தின் றோயல் விமானப்படை விமானங்கள் வானில் வட்டமிட்டு, ஓரினச்சேர்க்கையாளர்களின் குறியீடான வானவில் நிறத்தினாலான புகையை வெளிப்படுத்தின.

# பிரிட்டிஷ் புதிய பிரதமர் போரிஸ் ஜோன்ஸன்!

## கருத்துக் கணிப்பில் அவர் அமோக முன்னணி



லண்டன்,ஜுலை09

புதிய பிரிட்டிஷ் பிரதமராக போரிஸ் ஜோன்ஸன் வருவார் என நம்பப்படுகிறது. கருத்துக் கணிப்பில் அவர் முன்னிலை வகுத்துள்ளார்.

ஐரோப்பிய கூட்டமைப்பில் இருந்து இங்கிலாந்து வெளியேறும் 'பிரெக்ஸிட்' நடவடிக்கையை வெற்றிகரமாக செய்து முடிக்க இயலாத நிலையில் பிரதமர் தெரசா மே பதவி விலகுகிறார் என அறிவித்து விட்டார்.

இதனால் ஆளும் கன்சர்வேடிவ் கட்சி புதிய பிரதமரை தேர்வு செய்கிறது.

புதிய பிரதமருக்கான போட்டியில் முன்னாள் வெளியுறவு மந்திரி போரிஸ் ஜோன்ஸனுக்கும், தற்போதைய வெளியுறவு மந்திரி ஜெராமி ஹண்டுக்கும் இடையே நேரடி போட்டி ஏற்பட்டுள்ளது.

ஆளும் கொன்சர்வேடிவ் கட்சி தலைவரை (புதிய பிரதமரை) தேர்ந்தெடுப்பதற்காக 1 லட்சத்து 60 ஆயிரம் உறுப்பினர்களுக்கு வாக்குச்சீட்டுகள் போய்ச்சேர தொடங்கி உள்ளன. இந்த வாக்குச்சீட்டுகளில் அவர்கள் வாக்களித்து, திருப்பி அனுப்பி வைக்க வரும் 22 ஆம் திகதி வரை அவகாசம் உள்ளது. 23 ஆம் திகதி வாக்குகள் எண்ணி முடிவு அறிவிக்கப்பட்டு விடும். உடனடியாக பிரதமர் தெரசா மே, பக்கிங்ஹாம் அரண்மனைக்குச் சென்று ராணி இரண்டாம் எலிசபெத்தைச் சந்தித்துத் தனது ராஜினாமாக் கடிதத்தை வழங்குவார். உடனடியாகப் புதிய பிரதமர் பதவி ஏற்பார்.

இந்த நிலையில் 'டைம்ஸ்' நாளிதழ் சார்பில் கொன்சர்வேடிவ் கட்சியினர் மத்தியில் ஒரு கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டது. இந்த கருத்துக்கணிப்பு முடிவு வெளியாகி உள்ளது. இதில், போரிஸ் ஜோன்ஸனுக்கு 74 சதவீதம் பேரின் ஆதரவு கிடைத்துள்ளது. 26 சதவீதம்பேர் மட்டுமே ஜெராமி ஹண்டுக்கு ஆதரவாக உள்ளனர்.

இதன் காரணமாக போரிஸ் ஜோன்ஸன் அமோக வெற்றி பெற்று பிரதமர் ஆவார் என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது

# நவாஸ் ஷெரீப்புக்கு தண்டனை தீர்ப்பு நீதிபதியை மிரட்டியே பெறப்பட்டதாம்!

## புதிதாக வெளியான வீடியோவால் பரபரப்பு

லாகூர்,ஜுலை09

பாகிஸ்தானில் ஊழல் வழக்கில் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப்புக்கு தண்டனை வழங்குமாறு நீதிபதிக்கு மிரட்டல் விடுக்கப்பட்டதாக முறைப்பாடு எழுந்துள்ளது. இது தொடர்பான வீடியோ வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

பாகிஸ்தானில் பிரதமராக இருந்த நவாஸ் ஷெரீப் (வயது 68), வெளிநாடுகளில் சட்ட விரோதமாக சொத்துகள் வாங்கிய பிரபலங்கள் தொடர்பான 'பனாமா ஆவண கசிவு' வழக்கில் சிக்கினார். இதில் அவர் குற்றவாளி என அந்த நாட்டின் உச்ச நீதிமன்றம் தீர்ப்பு அளித்து, அவரது பதவியை பறித்தது.

அதைத் தொடர்ந்து அவர் மீதும், அவரது குடும்பத்தினர் மீதும் 3 ஊழல் வழக்குகளை பாகிஸ்தான் லஞ்ச ஒழிப்பு பொலிஸார் பதிவு செய்தனர். அதில் ஒரு வழக்கு, அல் – அஜிசியா உருக்காலை ஊழல் வழக்கு.

இந்த வழக்கில், நவாஸ் ஷெரீப்புக்கு எதிராக ஆதாரங்கள் இருக்கின்றமையால் அவரை குற்றவாளி எனக் கருதி 7 ஆண்டு சிறைத்தண்டனை விதித்து இஸ்லாமாபாத் பொறுப்புடைமை (ஊழல் தடுப்பு) நீதிமன்றத்தின் நீதிபதி முகமது அர்ஷத் மாலிக் கடந்த வருடம் தீர்ப்பு அளித்தார்.

அதைத் தொடர்ந்து நவாஸ் ஷெரீப், லாகூர் காட்லக்பத் சிறையில் தண்டனை அனுபவித்து வருகிறார்.

இந்த நிலையில் லாகூரில் நவாஸ் ஷெரீப்பின் மகள் மரியம் நவாஸ், நேற்று சனியன்று அவசரமாகக் கூட்டப்பட்ட பத்திரிகையாளர்கள் கூட்டத்தில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவருடன் அவரது சித்தப்பாவும், பாகிஸ்தான் முஸ்லிம் லீக்(நவாஸ்) கட்சியின் தலைவருமான ஷாபாஸ் ஷெரீப்பும் உடன் இருந்தார். அப்போது மரியம் நவாஸ் கூறியவை வருமாறு: –



அல் – அஜிசியா உருக்காலை ஊழல் வழக்கில் எனது தந்தை நவாஸ் ஷெரீப் குற்றவாளி என அறிவித்து 7 ஆண்டு சிறைத் தண்டனை விதித்து கடந்த ஆண்டு தீர்ப்பு அளித்தவர் இஸ்லாமாபாத் பொறுப்புடைமை நீதிமன்ற நீதிபதி முகமது அர்ஷத் மாலிக் ஆவார்.

எனது தந்தைக்கு தண்டனை தீர்ப்பு வழங்க வேண்டும் என்று மறைமுக சக்திகளிடம் இருந்து மிகப்பெருமளவில் நீதிபதிக்கு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில்தான் அந்த தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக குற்ற மனப்பான்மை காரணமாக எங்கள் கட்சியை சேர்ந்த நாசிர் பட்டை தனது வீட்டுக்கு அழைத்து அந்த நீதிபதி பேசி இருக்கிறார்.

இந்த வழக்கில் எனது தந்தைக்கு தண்டனை விதித்து தீர்ப்பு வழங்காவிட்டால், நீதிபதியின் தனிப்பட்ட வீடியோ ஒன்றை வெளியிட்டு விடுவோம் என மிரட்டி உள்ளனர்.

எனது தந்தை நவாஸ் ஷெரீப்புக்கு எதிராக பண மோசடி, கமிஷன் அல்லது பிற தவறான பண பரிமாற்றத்துக்கு எந்த ஆதாரமும் இல்லை என நீதிபதி இப்போது கூறி உள்ளார். ஆனாலும் எனது தந்தையை சிறைக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்பது நீதிபதிக்கு உத்தரவு. இப்போது நீதிபதி மனம் வருந்துகிறார்.

நீதிபதி எனது தந்தைக்கு தண்டனை விதிக்க விரும்பவில்லை. அவர் தண்டனை விதிக்க வைக்கப்பட்டார். அதில் இருந்து அந்த நீதிபதி பல முறை தற்கொலை செய்து கொண்டு விடலாமா என்று சிந்தித்து இருக்கிறார்.

எனது தந்தைக்கு இந்த வழக்கில் நீதி கிடைக்காமல் போனது. இப்போது இதை இறைவனின் உதவியாக கருதுகிறோம்.

எனது தந்தைக்கு தண்டனை தீர்ப்பு அளித்தவிதம் பற்றிய நீதிபதியின் கூற்று அடங்கிய வீடியோ வெளியாகி உள்ள நிலையில் எனது தந்தை இன்னும் சிறையில் தொடரக்கூடாது. அவர் பிணையில் வெளிவர இஸ்லாமாபாத் மேல்நீதிமன்றில் இந்த வீடியோவைப் பயன்படுத்துவோம்.–இவ்வாறு அவர் கூறினார்.

நீதிபதி முகமது அர்ஷத் மாலிக், நாசிர் பட்டுடன் பேசினார் எனக் கூறப்படும் வீடியோவை மரியம் நிருபர்களுக்கு திரை வைத்து வெளியிட்டு காட்டினார்.

இது பாகிஸ்தானில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

ஆனால் இம்ரான்கான் அரசு இந்த வீடியோ சித்திரிக்கப்பட்ட ஒன்று என்று கூறுகிறது. இதைத் தடயவியல் பரிசோதனைக்கு அனுப்ப வேண்டும் என்றும், இது நீதித்துறையின் மீதான தாக்குதல் என்றும் இம்ரான்கான் அரசு மேலும் கூறுகிறது.

காலைக்கதிர் Kalaikathir





## ஜி-20 உச்சி மாநாட்டின்பின்

# அமெரிக்க அதிபரின் தொடர் 'ஸ்டண்ட்'

அண்மையில் ஜி 20 நாடுகளின் உச்சிமாநாடு ஜப்பானில் உள்ள ஒசாகா நகரில் நடைபெற்றது. இந்த மாநாட்டின்போது அமெரிக்க அதிபரும் சீன அதிபரும் சந்தித்துப் பேச்சு நடத்தி இருந்தனர்.

பேச்சுவார்த்தையின்போது 300 பில்லியன் டொலர் மதிப்புள்ள சீன இறக்குமதிப் பொருள்களின் மீதான வரி உயர்வினைத் தற்காலிகமாக நிறுத்திவைப்பது என்ற முடிவு ஏற்பட்டது. மிக முக்கியமாக, சீன மொபைல் நிறுவனமான ஹுவாவே மீதான தடைகளை நீக்குவதாக அமெரிக்க அதிபர் அறிவித்துள்ளார்.

பதிலுக்கு, அமெரிக்க வேளாண் பொருள்களின் இறக்குமதியின் மீதான கட்டுப்பாடுகளை சீனா தளர்த்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. உலக அளவில் பங்குச் சந்தைகள் குதூகலம் அடைவதற்கு இந்தக் காரணங்கள் போதாதா?

அமெரிக்கா - சீனா இடையே கடந்த சில மாதங்களாக நடந்து வரும் வர்த்தகப் போர் பதற்றம் இந்த இருபெரும் தலைவர்களின் சந்திப்பினால் கொஞ்சம் தணியவே செய்திருக்கிறது.

> உலக சமாதானத்திற்குப் பெரும் அச்சுறுத்தல் தரும் நாடு என அமெரிக்காவினால் தொடர்ந்து வர்ணிக்கப்பட்டு வந்த வடகொரியாவுடன் நடைபெற்ற இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க சந்திப்பும் உலக அளவில் பங்கு சந்தைகளைப் பெருமளவிற்கு உற்சாகப்படுத்தியது. ஆனால், உலகின் நிரந்தர நாணயம் என்றும் நிலையற்ற தருணங்களின் பாதுகாவலன் என்றும் கருதப் படுகிற தங்கத்தின் விலை ஒரே நாளில் ஒரு அவுன்ஸுக்கு 25 டொலர் வரை குறைந்து எல்லோருக்கும் அதிர்ச்சியைத் தந்தது.

உலகப் பொருளாதாரத்தையே ஆட்டம் காணவிருக்கும் இந்த வர்த்தகப் போரின் பின்னணி என்ன, இதனால் அமெரிக்காவுக்கோ சீனாவுக்கோ என்ன நன்மை?

### வர்த்தகப் போர்...

நவீன யுகத்தில், வல்லரசுகள் போர்க்களத்தில் நேருக்கு நேர் மோதிக்கொள்வதில்லை. அப்படி மோதிக்கொண்டால், இரண்டு பக்கத்திலும் மக்களுக்குக் கடுமையான பாதிப்புகள் ஏற்படவே செய்யும். எனவே, வணிகச் சந்தைகளில் போர் புரிய ஆரம்பித்திருக்கின்றன.

சீனாவின் சர்வதேச ஆதிக்கத்தை கட்டுப்படுத்தவும், அமெரிக்காவில் தனது சொந்த அரசியல் செல்வாக்கை வளர்த்துக்கொள்ளவும் கடந்த ஓராண்டுக்கும் மேலாக சீனாவின் மீது ஏராளமான வர்த்தகக் கட்டுப்பாடுகளை விதித்து வருகிறார் அமெரிக்க அதிபர் ட்ரம்ப்.

இந்தியா உள்ளிட்ட பல நட்பு நாடுகளும் கூட ட்ரம்ப்பின் கணைகளிலிருந்து தப்ப முடியவில்லை என்றாலும்கூட, அமெரிக்காவிற்குப் பெருமளவில் ஏற்றுமதி செய்து வரும் சீனாவின் மீதே அவரின் அதிகப்படியான கவனம் இருந்தது.

குறிப்பாக, சீனாவின் மிகப் பெரிய தொலைத்தொடர்பு நிறுவனமான ஹுவாவே மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் பெரும் சர்ச்சைகளைக் கிளப்பின. பதிலுக்கு சீனாவும் அமெரிக்கா மீது இறக்குமதிக் கட்டுப்பாடுகளை விதித்ததுடன் தனது நாணயத்தின் (யுவான்) மதிப்பையும் அதிரடியாகக் குறைத்தது.

## வர்த்தகப் போர் முடிவுறுமா?

அமெரிக்க - சீன வர்த்தகப் போர் பதற்றத்தால் உலக நாடுகளின் ஒட்டுமொத்த வர்த்தகம் பாதிப்பு அடைந்ததுடன் உலகப் பொருளாதாரமும் 0.3% வரை வீழ்ச்சியடையக் கூடிய அபாயமும் உருவாகியுள்ளதாக உலக வங்கி எச்சரித்தது.

### ஒசாகா உச்சி மாநாடு

இந்தப் போர் பதற்றத்தைக் கொஞ்சமாவது தணிக்க ஏதாவது ஒரு வாய்ப்பு உருவாகாதா என உலகமே ஏங்கிக் கொண்டிருந்தபோதுதான், ஜி-20 நாடுகளின் உச்சி மாநாடு வந்தது. உலகின் மிகப் பெரிய 20 நாடுகளின் உச்சி மாநாடு, ஜப்பானில் உள்ள ஒசாகா நகரில் சமீபத்தில் நடைபெற்றது. இதில் அமெரிக்க அதிபர் ட்ரம்ப், சீன அதிபர் ஜின்பிங் மற்றும் இந்தியப் பிரதமர் மோடி உள்பட முக்கியத் தலைவர்கள் கலந்துகொண்டு பல்வேறு பிரச்சினைகள் குறித்து ஆலோசனைகள் நடத்தினார்கள்.

என்றாலும், ட்ரம்ப் மற்றும் ஜின்பிங்கின் தனிப்பட்ட முறையிலான சந்திப்பின் மீதே உலகத்தின் கவனம் இருந்தது. ஜூன் 29 ஆம் திகதி நடைபெற்ற இந்தச் சந்திப்பு மிக சுமுகமாக நடைபெற்றது ஆச்சரியம் தருவதாக இருந்தது. இந்தச் சந்திப்பின் முடிவில், 300 பில்லியன் டொலர் மதிப்பிலான சீனப் பொருள்களின்மீது விதிக்கவிருந்த அதிகப்படியான இறக்குமதி வரியை நிறுத்திவைப்பதாகவும் ஹுவாவே மீதான தடைகளை நீக்குவதாகவும் ட்ரம்ப் அறிவித்தது பலரையும் நிம்மதி பெருமூச்சு விட வைத்தது.

### வடகொரிய விஜயம்...

அதிரடி நடவடிக்கைகளுக்குப் பஞ்சமில்லாத ட்ரம்ப், எந்தவொரு முன்னறிவிப்புமின்றி, திடீரென ஜூன் 30 ஆம் திகதி, வடகொரியாவிற்கு வருகை புரிந்து, அந்த நாட்டு அதிபரான கிம் ஜாங் உன்-னைச் சந்தித்து ஆலோசனை நடத்தினார். அமெரிக்க ஆதிக்கம் மிகுந்த ஐக்கிய நாடுகள் சபையினால் மிகக் கடுமையான கெடுபிடிகளைச் சந்தித்துவரும் வடகொரியாவிற்கு விஜயம் புரிந்த முதல் அமெரிக்க அதிபர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார் ட்ரம்ப்.

உலக சமாதானத்திற்குப் பெரும் அச்சுறுத்தல் தரும் நாடு என அமெரிக்காவினால் தொடர்ந்து வர்ணிக்கப்பட்டு வந்த வடகொரியாவுடன் நடைபெற்ற இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க சந்திப்பும் உலக அளவில் பங்கு சந்தைகளைப் பெருமளவிற்கு உற்சாகப்படுத்தியது. ஆனால், உலகின் நிரந்தர நாணயம் என்றும் நிலையற்ற தருணங்களின் பாதுகாவலன் என்றும் கருதப்படுகிற தங்கத்தின் விலை ஒரே நாளில் ஒரு அவுன்ஸுக்கு 25 டொலர் வரை குறைந்து எல்லோருக்கும் அதிர்ச்சியைத் தந்தது.

### நிலைமாறும் ட்ரம்ப்...

வடகொரியாவின் அணுசக்தித் திட்டம் குறித்த இருதரப்பு சந்திப்புகள் தொடரும் என்று அறிவித்த அதே நாளிலேயே, வடகொரியாவின் மீதான பொருளாதாரக் கெடுபிடிகளை அதிகரிக்க வேண்டும் என்று அமெரிக்க அரசு ஐக்கிய நாடுகள் சபையில் வலியுறுத்தியிருப்பது எல்லோருக்கும் அதிர்ச்சியை வரவழைத்துள்ளது. ஐக்கிய நாடுகளுக்கான வடகொரியப் பிரதிநிதி, இதுகுறித்து கடும் கண்டனங்களைத் தெரிவித்துள்ளார்.

குறுகிய காலத்திற்குள் நிகழ்ந்த கிம் மற்றும் ட்ரம்ப் ஆகியோருக்கிடையேயான மூன்றாவது சந்திப்பு, கொரிய பிராந்தியத்தில் நிரந்தர அமைதியைக் கொண்டுவரும் என்று தென் கொரிய அதிபர் நம்பிக்கை தெரிவித்திருக்கிறார்.

ஆனால், வடகொரிய அதிபருடனான சந்திப்பு, ட்ரம்ப்பின் பிரசாரத்திற்கு மட்டுமே உதவும் என்றும், ஜனநாயக விரோதமாகப் பதவியேற்றுள்ள கிம்மை வடகொரியாவின் தலைவராக அங்கீகரிக்காத அமெரிக்காவின் நீண்டகால அரசியல் நிலைப்பாட்டிற்கு எதிராகவும் அமைந்து விடும் என்றும் அமெரிக்க அரசியல் பார்வையாளர்கள் எச்சரித்துள்ளனர்.

### சவுதி இளவரசருடனும் சந்திப்பு

கசோகி கொலையில் குற்றம்சாட்டப்பட்டு வரும் சவுதி இளவரசர் முஹம்மத் பின் சல்மானையும் ஜி-20 மாநாட்டினூடே சந்தித்த ட்ரம்ப், அவரைச் சமூக சீர்திருத்தவாதி என வெகுவாகப் புகழ்ந்து அதிர்ச்சியடைய வைத்தார். சில மாதங்களுக்குமுன்புதான், அமெரிக்க அரசின் புலனாய்வு அமைப்பு சல்மான் மீது குற்றம்சாட்டியது குறிப்பிடத்தக்கது.

சமீபத்திய ஜி-20 மாநாட்டு முடிவுகள் தற்போதைக்குச் சீனாவிற்குச் சாதகமாக அமைந்திருக்கின்றமை போல தோன்றுகிறது. ஆனால், ட்ரம்பின் நிரந்தரமற்ற நிலைப்பாடுகளில் இதுவும் ஒன்றுதான் என்று சிலர் சொல்கிறார் கள்.

அடுத்த ஆண்டில் நடக்கவிருக்கும் ஜனாதிபதி தேர்தலில் மறு தேர்வை எதிர்நோக்கியுள்ள ட்ரம்ப், அரசியல் காரணங்களுக்காகவும் உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிப்பதற்காகவும் மீண்டும் சீனாமீது புதிய கட்டுப்பாடுகளைக் கொண்டுவருவார் என்று தாராளமாக எதிர்பார்க்கலாம்.

அதேசமயம், அதிகப்படியான கட்டுப்பாடுகள், அமெரிக்கப் பொருளாதாரத்தினையும் பாதிக்கும் என்பதைத் தற்போது அனுபவரீதியாகப் புரிந்து கொண்டுள்ள ட்ரம்ப், முதலில் பாய்வது, பின்னர் பதுங்குவது, மீண்டும் பாய்வது என்கிற போர் தந்திரத்தையே பின்பற்றுவார் என்றே தோன்றுகிறது.

எனவே, வர்த்தகப் போர் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ இன்னும் சிலபல மாதங்களுக்குத் தொடரும் என்றே எதிர்பார்க்கலாம். அதுவரை உலக அளவிலான பங்குச் சந்தைகள் ஏற்ற இறக்கத்தில்தான் இருக்கும்; தங்கம் விலையும் மேலேயும் கீழேயுமாகத்தான் இருக்கும்.

இந்தப் போர் பதற்றத்தைப் புரிந்து கொண்டு, முதலீட்டு உத்தியை அமைத்துக் கொண்டால், முதலீட்டில் நஷ்டத்தைத் தவிர்த்து, லாபம் பார்க்க முடியும்! ★

# சம்பந்தன், மாவை, சுமந்திரன் யோசித்து முடிவெடுக்க இதுவே இறுதிச் சந்தர்ப்பம்

## சுட்டிக்காட்டுகிறார் சுரேஷ் பிறேமச்சந்திரன்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜுலை 09

அரசிற்கு எதிராக நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட இருக்கும் இந்த இறுதிச் சந்தர்ப்பத்திலாவது தமிழ் மக்களின் நலன் சார்ந்து சம்பந்தன், சுமந்திரன், மாவை சேனாதிராசா போன்றவர்கள் யோசித்து முடிவெடுக்க வேண்டுமென ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

கட்டப்பிராயிலுள்ள அவரது இல்லத்தில் நேற்றுமுன்தினம் நடத்திய ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்–

அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்று நாடாளுமன்றத்தில் வர இருக்கின்றது. அந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை வருகின்றபோது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 14 நாடாளுமன்ற உறுப்பினர்களும் என்ன செய்யப் போகின்றார்கள் என்றொரு கேள்வி இருக்கின்றது.

முல்லைத்தீவின் செம்மலையில் இருக்கக்கூடிய 300 வருடங்கள் பழமையான பிள்ளையார் கோவிலில் இராணுவத்தின் துணையுடன் ஒரு புத்த துறவி பௌத்த ஆலயத்தை நிர்மாணித்திருக்கின்றார்.

நீதிமன்றம் ஊடாக சில கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டபோதும் விகாரை அகற்றப்படாமல் அங்கு தொடர்ந்தும் உள்ளதை நாமே பார்க்கிறோம். அங்கு ஒருபொங்கல்நடப்பதற்குக்கூட முடியாத மிகவும் இக்கட்டான நிலையில் தான் நூற்றுக்கணக்கில் தமிழர்கள் ஒன்று கூடி அந்தப் பொங் கலைச் செய்ய வேண்டிய ஒரு சூழ்நிலை இருந்தது.

ஆகவே இவ்வாறான ஒரு சூழ்நிலையில் நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்று வருகின்றபோது வடக்கு–கிழக்கு மாகாணத்தில் யுத்தத்திற்குப் பின் எவ்வளவு காணிகள் பிடிக்கப்பட்டிருக்கின்றன, அந்தக் காணிகள் அனைத்தும் விடுவிக்கப்படவேண்டும் என்பதும், பௌத்த துறவிகளினால் புதிதாக உருவாக்கப்பட்ட பௌத்த கோவில்கள் தவறானதென்றும், அவை அனைத்தும் நிறுத்தப்பட வேண்டுமென்றும் குறைந்தபட்சம் சில கோரிக்கைகளையாவது அரசிடம் முன்வைக்க வேண்டும்.

அவ்வாறு முன்வைத்து அந்தக் கோரிக்கைகள் உடனடியாக நிறைவேற்றப்படும் என்ற சில உறுதிமொழிகளைப் பெற்றுக் கொண்டாவது இவர்கள் இதற்கு வாக்களிக்கலாம். ஏனென்றால் ஏற்கனவே இந்த அரசைக் கவிழ்ப்பதில் இருந்தது பாதுகாத்துவர்கள் கூட்டமைப்பினர் என்பது எல்லோருக்கும் தெரியும்.

இப்போது வரக்கூடிய நம்பிக்கையில்லாப் பிரேரணையிலும் அதனைத்தான் இவர்கள் செய்யப் போகின்றார்கள். ஆனால் அவற்றைச் செய்வதற்கு முன்பாக குறைந்தபட்சம் அரசு 290 கோடி ருபாயை ஒதுக்கி வடக்கு–கிழக்கு மாகாணங்களில் புதிய பௌத்த கோவில்களைக் கட்டுவதற்கான வேலையைச் செய்கின்ற பொழுது அதனை உடன் நிறுத்த வேண்டுமென்றும், ஏற்கனவே இவ்வாறு அமைக்கப்பட்டவை அகற்றப்பட வேண்டுமென்றும் குறைந்தபட்ச உறுதிமொழிகளையாவது பெற்றுக் கொண்டு செயற்படுவார்களாக இருந்தால் நிச்சயமாக அது தமிழ் மக்களுக்குப் பிரயோசமானதாக இருக்கும்.

அவ்வாறு இல்லாவிட்டால் முல்லைத்தீவு மாவட்டத்தின் பெரும்பகுதியை அவர்கள் மகாவலி அபிவிருத்தி என்றும் புராதன சொத்துக்கள் என்றும் அபகரித்து வடக்கு–கிழக்குத் தொடர்ச்சியை இல்லாமல் செய்கின்ற பெரிய கைங்கரிய நடவடிக்கையை தொடர்ந்தும் மேற்கொள்வார்கள்.–என்றார். (ஜ–07)

# சு.க. உறுப்பினர்களுடன் வடக்கு ஆளுநர் சந்திப்பு





யாழ்ப்பாணம், ஜுலை 09

வடக்கு மாகாணத்தின் பிரதேச சபைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் அமைப்பாளர்களுக்கும் வடக்கு ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முற்பகல் யாழ் நாவலர் மண்டபத்தில் இடம்பெற்றது.


ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமைத்துவத்தின் கீழ் செயற்பட்டுவரும் மக்கள் பிரதிநிதிகள் தமது பிரதேச மக்களின் பொருளாதார வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் செயற்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்ட ஆளுநர், அதை நோக்காக முன்வைக்கப்படும் திட்டங்களுக்குப் பிரதேச சபைகளின் ஊடாக உதவி புரிவதற்குத் தயாராக இருக்கின்றார் என்றும் குறிப்பிட்டார்.

இதேவேளை ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் என்ற வகையில் பிரதேச சபைகளின் மட்டத்திலும் எதிர்கொள்ளும் சமூக பிரச்சினைகள் தொடர்பில் இதன்போது விரிவாக ஆராயப்பட்டது. (ஜ)

# கொழும்பு தாமரைக் கோபுர நிர்மாணப் பணிகள் நிறைவு

கொழும்பு, ஜுலை 09

கொழும்பு தாமரைக் கோபுர நிர்மாணப் பணிகள் நிறைவடைந்துள்ளன எனவும் இந்த நிர்மாணச் செயற்றிட்டத்தின் இறுதிக்கட்ட மேற்பார்வை நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் செயற்றிட்ட ஆலோசகர் பேராசிரியர் சமித்த மானவடு தெரிவித்துள்ளார்.



2012 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் ஆரம்பமான இந்தச் செயற்றிட்டம் ஏழு ஏக்கர் நிலப்பரப்பில் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இந்தக் கோபுரத்தின் உயரம் 356 மீற்றர்களாகும். இந்தக் கோபுரத்தின் கீழ்மட்ட மூன்று மாடிகள் வர்த்தக நடவடிக்கைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன.

எஞ்சியுள்ள எட்டு மாடிகளில் இரண்டு மாடிகள் களியாட்ட நிகழ்வுகளுக்கும் தொலைத்தொடர்பு நடவடிக்கைகளுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

ஒவ்வொரு மாடியிலும் சுமார் 400 பேர் உள்ளடங்கக் கூடிய இருக்கை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இந்தக் கோபுரத்தில் 250 வாகனங்கள் நிறுத்துவதற்கான தரிப்பிட வசதிகளும் உள்ளன. தொலைத்தொடர்பு நெறிப்படுத்தல் ஆணைக் குழுவின் கீழ் இந்த நிர்மாணப்பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சின் செயலாளரின் மேற்பார்வையில் இந்த நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. (ஜ)

northern PC Park
கணினி உலகில் நம்பகமான சேவையில் 10 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
வடக்கின் கணினிப் பூங்கா
# 10, Muddaskada Junction Stanly Road, Jaffna
தரமான கணினிகளைப் பெற்றுக் கொள்ள நம்மை நாடுங்கள்
www.pcpark.co
info.pcpark.co
Northern Pc Park 0777570124 0215675566
NPcpark 0773366443 0212229581
northernpcpark 0766999597 0212222050
Northern Pc Park 0717772377 0212220388



# கோபா அமெரிக்கா கிண்ணத்தை 9ஆவது முறை ஏந்திய பிரேஸில்!

கோபா அமெரிக்கா உதைபந்துத் தொடரில், பெரு அணியை வீழ்த்தி பிரேஸில் அணி 9ஆவது முறையாக சம்பியனாக வாகை சூடியுள்ளது.

தென் அமெரிக்கக் கண்டத்து அணிக்களுக்காக நடத்தப்படும் கோபா அமெரிக்கா உதைபந்து தொடரின் 46ஆவது அத்தியாயம் நேற்று முன்தினம் முடிவுக்கு வந்தது.

விறுவிறுப்பாக நடைபெற்று வந்த இத்தொடரில், நேற்று முன் தினம் நடைபெற்ற இறுதிப் போட்டியில், பிரேஸில் அணியும், பெரு அணியும் மோதிக்கொண்டன.

மரகானா விளையாட்டரங்கில் நடைபெற்ற இந்தப் போட்டியில், ஆரம்பம் முதலே இரண்டு அணிகளும் சிறப்பாக விளையாடின.

போட்டியின் 15ஆவது நிமிடத்தில் பிரேஸில் அணி, தனது முதல் கோலை புகுத்தி இரசிகர்களை இன்ப வெள்ளத்தில் ஆழ்த்தியது. இந்த கோலை அணியின் வீரரான எவர்டொன் சோர்ஸ் அடித்தார்.

இதனைதொடர்ந்து பதில் கோல் போடுவதற்கு கடுமையாக முயற்சித்த பெரு அணிக்கு போட்டியின் 44ஆவது நிமிடத்தில் பெனால்டி வாய்ப்பொன்று கிடைத்தது.

இந்த பொன்னான வாய்ப்பை சரியாக பயன்படுத்திய நட்சத்திர வீரர் பவுலோ குரேரிரோ அதனை கோலாக மாற்றி, கோல் கணக்கை 1 – 1 என சமநிலைப்படுத்தினார்.

இதன்பிறகு முன்னிலை கோலை புகுத்த இரண்டு அணிகளும் முட்டி மோதிக்கொண்டன. எனினும் அந்த அதிஷ்டம் பிரேஸில் அணிக்கே கிடைத்தது.

போட்டியின் 48ஆவது நிமிடத்தில் நட்சத்திர வீரர் கெப்ரியஸ் ஜீஸஸ், அணிக்கு அற்புதமான கோலொன்றை பெற்றுக்கொடுத்து அணியை 2 – 1என முன்னிலைப் படுத்தினார்.

இதனையடுத்து, இரண்டு அணிகளும் கோல் போடுவதற்கு ஆக்ரோமாக விளையாடின. இந்த தருணத்தில் பிரேஸில் அணியின் நட்சத்திர வீரர் கெப்ரியஸ் ஜீஸஸ்ஸுக்கு சிவப்பு அட்டை காண்பிக்கப்பட்டது.

இதனால் 10 வீரர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அணியாக பிரேஸில் அணி விளையாடியது.

இதனை தொடர்ந்தும் தனது ஆக்ரோஷத்தை கைவிடாது இரண்டு அணிகளும் கோல் போடுவதற்குக் கடுமையாக முயற்சித்தன.

போட்டியின் 90ஆவது நிமிடத்தில் பிரேஸில் அணியின் வீரர் ரிச்சாலிசன் அணிக்காக ஒரு கோலை போட்டுக் கொடுக்க அணி 3 – 1 என்ற கோல்கள் கணக்கில் உச்சம் தொட்டது.

போட்டி நிறைவு பெறுவதற்கு சொற்ப நேரங்களே இருந்த நிலையில், பெரு அணிக்கு கோல் போட முடியவில்லை.

இதனால் போட்டியின் இறுதியில் பிரேஸில் அணி, 3 – 1 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் கிண்ணத்தை ஏந்தியது.

இதற்கு முன்னதாக பிரேஸில் அணி, 1919ஆம், 1922ஆம், 1949ஆம், 1989ஆம், 1997ஆம், 1999ஆம், 2004ஆம் மற்றும் 2007ஆம் ஆண்டுகளில் சம்பியன் பட்டம் வென்றுள்ளது.

இதுதவிர 11 முறை இரண்டாம் இடத்தையும், 7 முறை மூன்றாவது இடத்தையும், 3 முறை நான்காவது இடத்தையும் பிடித்துள்ளது.(ஐ)

# சம்பியனானது கரைச்சி

கிளிநொச்சி மாவட்ட பிரதேச செயலக இளைஞர் அணிகளுக்கிடையில் நடைபெற்ற உதைபந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டியில் கரைச்சி பிரதேச இளைஞர் அணியை எதிர்த்து பூநகரி பிரதேச இளைஞர் அணி மோதியது.

இந்த ஆட்டத்தில் 03:00 என்ற கோல் கணக்கில் கரைச்சி பிரதேச இளைஞர் அணி வெற்றி பெற்றுச் சம்பியனானது. (ஐ)



# அரையிறுதியுள் நுழையும் அடிப்படைப் பண்புகள் இலங்கையிடம் இல்லை



நடப்பு உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில், அரையிறுதிக்கு நுழையும் அளவுக்கு அடிப்படையான பண்புகள் இலங்கை கிரிக்கெட் அணியிடம் இருக்கவில்லை என அணியின் முன்னாள் தலைவர் மஹேல ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில், இலங்கை கிரிக்கெட் அணி விளையாடிய விதம் குறித்து கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில் –

மத்திய வரிசையில் போதுமான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தவில்லை என்பதோடு லசித் மலிங்கவை தவிர்த்து துடுப்பாட்ட வரிசைகளை அச்சுறுத்தும் அளவுக்கு பந்துவீச்சும் இருக்கவில்லை.

உலகக் கிண்ண அணி பற்றி எதிர்பார்ப்புகள் இருந்தன. இலங்கை போதுமான துடுப்பாட்டத்திறனை வெளிப்படுத்தாத போதும் பெரிய தொடர்களில் அவர்கள் எப்போதும் சிறப்பாக செயற்படுகின்றனர். மேற்கிந்திய தீவுகள் மற்றும் இங்கிலாந்துக்கு எதிரான அவர்களின் வெற்றி அவர்களுக்கு அதிக நம்பிக்கையை கொடுத்தது. அந்த வெற்றிகளுடன் முன்னோக்கிச் செல்ல வேண்டும். மழையால் கைவிடப்பட்ட போட்டிகளால் வாய்ப்புகள் நழுவிப்போயின. இல்லாவிட்டால் இந்தியாவுக்கு எதிரான இறுதிக் குழுநிலைப் போட்டி ஒரு தீர்க்கமான போட்டியாக இருந்திருக்கக் கூடும். நிலைமை மாறிவிட்டது.

அஞ்சலோ மத்தியூஸ் தொடரின் ஆரம்பத்தில் துடுப்பாட்டத் திறனுடன் இருக்கவில்லை. ஆனால், இங்கிலாந்துக்கு எதிரான இன்னிங்ஸ் அவருக்கு தீர்க்கமானதாக இருந்ததோடு அது அவருக்கு நம்பிக்கையை ஏற்படுத்தியது. இலங்கை கிரிக்கெட்டுகாக அவருக்கு அதிகம் பங்களிப்புச் செய்ய முடியும் என்பதோடு எதிர்கால திட்டத்தில் அவர் கட்டாயம் இருக்க வேண்டும்.

இந்தியாவுக்கு எதிராக இலங்கை சரியாக விளையாடவில்லை என்றபோதும் அவர்களின் பந்துவீச்சு ஒரே மாதிரியாக இருந்தது என்ற விமர்சனத்தை மாத்திரமே என்னால் முன்வைக்க முடியும். பந்துவீச்சுத்துறை அதிகம் கவலை அளிப்பதாக உள்ளது. மலிங்க தனது கிரிக்கெட் வாழ்வை முடித்துக் கொள்ளும் தருணத்தை எட்டியிருக்கும் நேரத்தில் எந்த ஒரு நிலையிலும் தாக்கம் செலுத்தக்கூடிய நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர நான்கு அல்லது ஐந்து பந்துவீச்சாளர்கள் தேவைப்படுகிறார்கள்.

அனுபவம் வாய்ந்த துடுப்பாட்ட வீரர்கள் மற்றும் அவிஷ்க பெர்னாண்டோ போன்ற இளம் வீரர்கள் மூலம் வலுவான துடுப்பட்ட வரிசை ஒன்றை கட்டியெழுப்ப முடியும். இவர்களில் பெரும்பாலானவர்கள் 2023 ஆம் ஆண்டு இந்தியாவில் நடைபெறும் உலகக்கிண்ண தொடர் வரை விளையாட தகுதி பெற்றவர்களாக உள்ளனர்.

எனினும், விக்கெட்டுகளை வீழ்த்தக்கூடிய பந்து வீச்சாளர்கள் தேவைப்படுகின்றனர். எனவே, ஒருநாள் பந்துவீச்சில் தமது திட்டம் என்ன என்பதை கண்டறிய வேண்டும். அணித்தலைவராக திமுத் கருணாரத்ன மிகச் சிறந்த பணியை ஆற்றினார் என அனைவரும் உணர்கின்றனர். அது அவருக்கு மிகப் பெரிய சவாலாக இருந்தபோதும் நிலைமையை கட்டுப்படுத்தி செயற்'பட்டார். சாதகமான முடிவுக்காக தம்மாலான அனைத்து முயற்சிகளையும் அவர் செய்தார்.

துடுப்பாட்டத்திலும் உலகக் கிண்ண தொடரைச் சிறந்த முறையில் அவர் ஆரம்பித்ததும் அவரது செயற்பாட்டுக்கு உதவியது. உலகக் கிண்ண தொடரில் தனக்கு வழங்கப்பட்ட பொறுப்பை சிறந்த முறையில் ஆற்றிய திமுத் தலைமைப் பொறுப்பில் தொடர் வதை பார்க்க இலங்கை விரும்பும் என்று நான் நம்புகிறேன் என கூறினார்.

**இன்றைய ஆட்டம் (அரையிறுதி)**

(பிற்பகல் 3 மணி)

**இந்தியா - நியூசிலாந்து**

VS

## கூட்டமைப்பினர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று மாலை 4 மணி முதல் 6 மணிவரை இந்தப் பேச்சுகள் நடந்தன.

முதலில் கல்முனை வடக்குப் பிரதேச செயலகத்தைத் தரம் உயர்த்தும் விடயம் குறித்துப் பேசப்பட்டது. இந்தப் பேச்சின் போது உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் அமைச்சர் வஜிர அபேவர்த்தனாவும் பங்கு பற்றினார்.

மேற்படி பிரசே செயலகம் தரம் உயர்வதாயின் அதற்கான நிதி அதிகாரமும், நிதிக் கையாள்கையும் உடன் வழங்கப்பட வேண்டும் எனச்சுட்டிக்காட்டிய கூட்டமைப்பினர், அப்பிரதேச செயலகத்துக்காக விசேடமாக நியமிக்கப்பட்ட கணக்காளர் இன்னும் அந்தச் செயலகத்தில் போயிருந்து பணியாற்றவில்லை என்பதை ஆட்சேபனையுடன் எடுத்தியம்பினர்.

சம்பந்தப்பட்ட கணக்காளரை இன்று செவ்வாய்க்கிழமை முதல் அந்தப் பிரதேச செயலகத்தில் போயிருந்து பணியாற்றுமாறு உத்தரவு பிறப்பித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அந்தப் பிரதேச செயலகத்துக்கான தனி வங்கிக் கணக்கு உட்பட தேவையான சகலவற்றையும் ஒரே நாளில் ஏற்படுத்திக் கொடுக்கவும் பணித்தார்.

மயிலிட்டித்துறைமுகத்தை விடுவித்தாலும் அப்பகுதி மீனவர்களின் குடியிருப்புப் பிரதேசங்கள் விடுவிக்கப்படவில்லை என்ற ஆட்சேபத்தை மாவை சேனாதிராசா முன்வைத்தார். அந்தக் குடியிருப்பு நிலப்பகுதியை விடுவிப்பதில் தாமதம் ஏன் என்று இராணுவத் தளபதியிடம் கோரி, உரிய நடவடிக்கையைத் தாம் எடுப்பார் எனப் பிரதமர் உறுதியளித்தார்.

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை விவகாரம், அப்பகுதியை கைத்தொழில் பேட்டையாக மாற்றுதல், அதற்குச் செல்வதற்கான பாதையில் உள்ள கடற்படையினரை ஒரு பக்கமாக நகர்த்துதல் போன்ற பல விடயங்களும் பேசி இணக்கம் காணப்பட்டன. இது பேசப்பட்டபோது துறைமுகங்கள் அமைச்சர் சாகல இரட்ணாயக்கவும் பேச்சில் கலந்து கொண்டார்.

அரசின் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை விடயத்தில் கூட்டமைப்பு அரசுக்கு ஆதரவாக வாக்களிக்க வேண்டும் எனப் பிரதமர் கோரினார்.

தங்கள் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இன்று (செவ்வாய்க்கிழமை) கொழும்புக்கு வந்ததும் அது குறித்துத் தாங்கள் கூடி ஒரு முடிவை எடுத்து அறிவிப்பார்கள் என்று சம்பந்தன் எம்.பி. பிரதமரிடம் தெரிவித்தார்.

இதற்கிடையில் –

கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ரெலோவின் அரசியல் குழு இன்று வவுனியாவில் கூடுகின்றது.

இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான வாக்கெடுப்பின் போது ரெலோவின் இரண்டு எம்.பிக்களும் அரசுக்கு ஆதரவாக வாக்களிக்கக் கூடாது என்ற முடிவை ரெலோ அரசியல் குழு இன்று எடுத்து அதனை தனது எம்.பிக்கள் மீது அழுத்தமாக அது பிரயோகிக்கும் என அறிய வந்தது. (உ)

## குண்டுத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமூக ஊடகங்களில் பரவிய வதந்தியால் நேற்றுப் பதற்ற நிலை ஏற்பட்டது.

இந்த அச்சுறுத்தலை அடுத்து ருஹுனு பல்கலைக்கழகத்தின் பாதுகாப்பைத் தீவிரப்படுத்துமாறு கோரிய பல்கலைக்கழகத்தின் பீடாதிபதியின் கையொப்பத்துடன் கூடிய அறிக்கை ஒன்று ஊட கங்களில் வெளியாகியுள்ளது.

அதேவேளை இந்த வதந்தி குறித்து பொதுமக்கள் அச்சம் கொள்ள வேண்டாம் என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (ஐ)

## நம்பிக்கையில்லாப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்துள்ளார்.

மக்களின் நலன் சார்ந்து நல்லதொரு முடிவைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் இன்று இடம்பெறவுள்ள கூட்டத்தில் எடுப்போம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

கிளிநொச்சி – தொண்டமான் நகர் வீதிக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வில் நேற்றுக் கலந்து கொண்ட பின், செய்தியாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே சிறிதரன் இவ்வாறு கூறினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்கள் வழங்கிய ஆணையின் பிரகாரமே செயற்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (ஐ)

## நெதர்லாந்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தங்கியுள்ளனர் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

நெதர்லாந்துக்கான புதிய தூதுவராக நியமிக்கப்பட்ட சுமித் நாகந்தல, ஹேக் நகருக்குச் சென்று பதவியைப் பொறுப்பேற்றுள்ள போதும், இலங்கைத் தூதுவராகப் பணியாற்றியவரின் பணிக்காலம் முடிந்த பின்னரும், அதிகாரபூர்வ வதிவிடத்தை விட்டுக் கொடுக்காமல் அங்கேயே தங்கியுள்ளார்.

சுமித் நாகந்தல பல வாரங்களுக்கு முன்னரே, பணிகளைப் பொறுப்பேற்று விட்டபோதிலும், அதிகாரபூர்வ வதிவிடம் ஒப்படைக்கப்படாததால் விடுதியொன்றில் தங்கியுள்ளார்.

பதவிக்காலம் முடிந்த தூதுவரும், புதிய தூதுவரும், இலங்கை வெளிவிவகார அமைச்சின் மூத்த இராஜதந்திரிகளாவர்.

இவர்கள் இருவருக்கும் இடையிலான முரண்பாடுகளினாலேயே, இந்த இழுபறி ஏற்பட்டுள்ளது,

பதவி விலகும் தூதுவருக்கு ஜூன் 19ஆம் திகதி தூதரகத்தின் சார்பில் பிரிவுபசார நிகழ்வுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதும், அவர் அதில் பங்கேற்கவில்லை என்றும் கூறப்படுகிறது. (ஐ)

## ஈஸ்டர் ஞாயிறு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய போதே, அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இதைப் பற்றி யாரும் பேச முன்வருவதில்லை. கதைப்பதற்கு பயப்படுகின்றனர். அம்பாந்தோட்டையைச் சீனாவுக்கு வழங்கிய போது, இந்தியா, அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான் போன்ற நாடுகள் சீனாவுக்கு வழங்கவேண்டாம் எனஎச்சரித்தன. ஏனெனில் அம்பாந்தோட்டை அரசியல் ரீதியில், பூகோள ரீதியில் முக்கியமான இடமாகும். அம்பாந்தோட்டையில் சீனா கால் பதித்ததால் இந்தியா, அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் என்பன இங்கு கால் பதிக்கப் பார்க்கின்றன – என்றார். (ஐ)

# டீ.ஐ.ஜி. முனசிங்கவிடம் நேற்று தீவிர விசாரணை

உயிர்த்த ஞாயிற்றுக்கிழமை நடந்த தாக்குதல் தொடர்பாக இடமாற்றம் செய்யப்பட்ட வடமேல் மற்றும் வடமத்திய மாகாணங்களுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் நந்தன முனசிங்க பொலிஸ் சிறப்பு விசாரணைப் பிரிவுக்கு அழைக்கப்பட்டு நேற்று நீண்டநேரம் விசாரிக்கப்பட்டார்.

அந்தத் தாக்குதலின்போது முனசிங்க மேல் மாகாணத்தின் பிரதிப் பொலிஸ் மா அதிபராக இருந்தார். பொலிஸ் சிறப்புப் புலனாய்வுப் பிரிவின் பிரதிப் பொலிஸ்மா அதிபர் மேவன் டி சில்வாவினால் இவர் கிட்டத்தட்ட ஆறு மணி நேரம் விசாரிக்கப்பட்டார் எனக் கூறப்பட்டது. (ஐ)

## கோட்டாவைச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

நுகேகொடையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஜனாதிபதித் தேர்தல் எப்போது என்ற குழப்பம் தற்போது ஜனாதிபதிக்கு ஏற்பட்டுள்ளது.

அரசமைப்பின் 30 இன் கீழ் 2 ஆம் சரத்திற்கு இணங்க, ஜனாதிபதியின் பதவிக்காலம் 5 ஆண்டுகளாக வரையறுக்கப்பட்டுள்ளது.

2005 ஆம் ஆண்டு உயர்நீதிமன்றில் இடம்பெற்ற வழக்கொன்றின்போது, ஐவரடங்கிய நீதிபதிகள் குழாமொன்றினால் இது தொடர்பில் தீர்ப்பொன்றும் வழங்கப்பட்டது.

அதாவது, ஜனாதிபதியின் பதவிக்காலம் அவர் பதவிப்பிரமாணம் செய்துக்கொண்ட தினத்திலிருந்து ஆரம்பிக்கப்படுவதாகக் கூறப்பட்டது.

அதற்கிணங்க, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பதவிக்காலம் 2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 9 ஆம் திகதியன்றே நிறைவடைகிறது.

எனவே, அடுத்த ஜனாதிபதித் தேர்தல் 2019 ஆம் ஆண்டு நவம்பர் 9 ஆம் திகதிக்கும், டிசெம்பர் 9 ஆம் திகதிக்கும் இடையில் நடைபெற்றாக வேண்டும்.

அதேநேரம், அரசமைப்புக்கு இணங்க, 2019 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 7 ஆம் திகதிக்கும் ஒக்ரோபர் 26 ஆம் திகதிக்கும் இடையில் ஜனாதிபதி தேர்தல் தொடர்பிலும் அறிவித்தல் விடுத்தே ஆகவேண்டும்.

19 ஆவது திருத்தச்சட்டத்துக்கு 2015, மே மாதம் 15 ஆம் திகதியன்றே சபாநாயகர் கைச்சாத்திட்டார்.

அதற்கிணங்க பார்க்கும்போது ஜனாதிபதியின் பதவிக்காலம் 2015 மே மாதம் 15 ஆம் திகதி ஆரம்பமாகி, 2020 மே, 15 ஆம் திகதியுடன் நிறைவடைகிறது என்ற தர்க்கத்துக்கு இணங்கவே, உயர் நீதிமன்றில் தற்போது வழக்குத் தொடரப்பட்டவுள்ளது.

ஆனால், 19 ஆவது திருத்தச்சட்டம் கைச்சாத்திடப்பட்ட நாளில் இருந்துதான் ஜனாதிபதியின் பதவிக்காலம் ஆரம்பமாகின்றது என்று 19 ஆவது திருத்தச் சட்டத்தின் எந்தவொரு சரத்திலும் கூறப்படவில்லை என்பதை நான் இங்கு தெளிவாகக் கூறிக் கொள்கிறேன்.

எனவே, உரிய நேரத்தில் நாட்டில் ஜனாதிபதித் தேர்தல் ஒன்று நடைபெற்றே ஆகவேண்டும்.

எமது தரப்பில் கோட்டாபய ராஜபக்ஷ தான் வேட்பாளர் என்பது உறுதியாகிவிட்டது. அவரும் அதற்கு ஆயத்தமாகிவிட்டார்.

அமெரிக்கக் குரியுரிமை விவகாரப் பிரச்சினையும் முழுவதுமாக தீர்க்கப்பட்டுவிட்டது.

அத்தோடு, அவருக்கு எதிராகத் தொடுக்கப்பட்டுள்ள வழக்குகளின் பிரகாரம் அவர் சிறைக்குச் சென்றாலும், அவர்தான் எமது ஜனாதிபதி வேட்பாளர் என்பதை நான் உறுதியுடன் கூறிக்கொள்கிறேன்.

உண்மையில், சிறைச்சாலையில் இருந்துக்கொண்டு வாக்குக் கேட்டால் இலகுவில் வெற்றியடையலாம் – என்றார். (ஐ)

## முஸ்லிம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று இரவு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் அவரது இல்லத்தில் நடந்த கூட்டத்தில் முஸ்லிம் அரசியல்வாதிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான ரவூப் ஹக்கீம், ரிஷாத் பதியுதீன் , பௌசி, பைசர் முஸ்தபா, அமீரலி, அப்துல்லா மஹ்ரூப், அலிசாஹிர் மௌலானா, பைசல் காசீம், மன்சூர், இஸ்மாயில் ஆகிய எம்.பிக்கள் இதில் கலந்து கொண்டனர் .

இந்தச் சந்திப்பில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை ரிஷாத் பதியுதீன் எம்.பி. விளக்கினார்.

அவர் தெரிவிக்கையில் –

ஞானசார தேரரை விடுவித்தது ஜனாதிபதி. இன்று தேரர் எமது உலமா சபையை விமரிசித்து கருத்துக்களை வெளியிடுவது குறித்து நாங்கள் கடும் அதிருப்தியை வெளியிட்டோம். இதை எங்களால் ஏற்கமுடியாது என்று கூறினோம். அதேபோல் குருநாகல் டாக்டர் மற்றும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு குற்றச்சாட்டு நிரூபிக்கப்படாதவர்களை விடுதலை செய்ய வேண்டுமென வலியுறுத்தினோம். அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தி முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் குறித்துச் சுட்டிக் காட்டினோம். இந்த விடயங்களை கவனமாக கேட்டுக் கொண்ட ஜனாதிபதி அவை தொடர்பில் உரிய நடவடிக்கைகளை எடுப்பதாக எம்மிடம் உறுதியளித்துள்ளார் – என்றார்.

ஜனாதிபதியை சந்திக்க முன்னர் இந்த எம்.பிக்கள் பிரதமரையும் சந்தித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கம்பெரலிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏமாற்றுகின்றது என நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

வடக்கு ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனுடன் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலை அடுத்து ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

வடக்கில் யுத்தம் முடிந்து 10 வருடங்கள் முடிந்தும் தற்போது பல்வேறு இன்னல்களை மக்கள் எதிர்கொண்டு வருகின்றனர். இதற்கு இந்த அரசின் தூரநோக்கற்ற செயற்பாடே காரணம்

வெளிநாட்டு முதலீடுகளைக் கொண்டுவந்து, மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து, இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பைக் கொண்டுவருவதற்கு இந்த அரசு எந்த முயற்சியையும் எடுக்கவில்லை. அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்றவாறு மட்டுமே அரசு செயற்பட்டு வருகிறது.

தற்போது தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினை, அரசியல் கைதிகள் விடுதலை, தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தல், பொருளாதாரம், விவசாயப் பிரச்சினைகள் எனப் பல்வேறு பிரச்சினைகள் காணப்படுகின்றன.

ஆனால் இந்த அரசு பிரச்சினைகள் தொடர்பாகப் பேசிக் கொண்டு இருக்கின்றதே தவிர இவற்றுக்கான தீர்வைப் பெற்றுக்கொடுக்காமல் கடந்த 4 ஆண்டுகளாக மக்களை ஏமாற்றி வருகிறது – என்றார். (ஐ)

## சுழற்சி முறையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

இலங்கை மின்சார சபைக்கான எரிபொருள் விநியோகத்தை இடைநிறுத்துவதாக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நேற்று விடுத்த கட்டளையை அடுத்தே இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கை மின்சார சபையின் எரிசக்தி மின் நிலையங்களுக்கான எரிபொருள் விநியோகத்தை இடைநிறுத்துவாத இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

இதனால் நாட்டில் எரிசக்தி மின் நிலையங்களின் மின் உற்பத்தி தடைப்படுவதனால் நாட்டில் ஏற்படும் மின் பற்றாக்குறையைத் தீர்க்கவே சுழற்சிமுறை மின் வெட்டு நடைமுறைப்படுத்தப்படும் என்று மின்சார சபை அறிவித்துள்ளது. (ஐ)

## பலாலியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனத் தெரியவருகிறது.

பலாலி விமான நிலையத்தை அபிவிருத்தி செய்து, முதற்கட்டமாக தமிழ்நாட்டில் உள்ள திருச்சி, மதுரை, சென்னை போன்ற விமானநிலையங்களுக்கு விமான சேவைகள் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறப்பட்டது.

இதற்கமைய, கடந்த 05ஆம் திகதி பலாலி விமான நிலையத்தை அபிவிருத்தி செய்யும் பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

போக்குவரத்து மற்றும் விமான சேவைகள் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க விமான நிலைய அபிவிருத்திப் பணிகளை ஆரம்பித்து வைத்தார்.

225 கோடி ரூபா செலவில் மேற்கொள்ளப்படவுள்ள இந்த அபிவிருத்தித் திட்டத்துக்கு இந்தியா 30 கோடி ரூபாவை கொடையாக வழங்கவுள்ளது.

முதற்கட்டமாக, 950 மீற்றராக உள்ள பலாலி விமான நிலையத்தின் ஓடுபாதை மீளமைப்புச் செய்யப்படவுள்ளது. இரண்டாவது கட்டமாக பெரிய விமானங்களைத் தரையிறக்கக் கூடிய வகையில் ஓடுபாதையின் நீளம் 2.3 கி.மீற்றராக விரிவாக்கப்படவுள்ளது.

இதையடுத்து, பலாலி விமான நிலையத்துக்கு மத்தள மற்றும் கொழும்பு விமான நிலையங்களில் இருந்து உள்நாட்டு மற்றும் வாடகை விமானங்கள் இயக்கப்படும்.

அத்துடன், முதற்கட்டமாக பெங்களூர், கொச்சின், மும்பை மற்றும் ஹைதராபாத் ஆகிய நகரங்களுக்கு நேரடி விமான சேவைகள் இயக்கப்படும் என்றும், 75 ஆசனங்களுக்குக் குறைவான ஆசனங்களைக் கொண்ட விமானங்களே சேவையில் ஈடுபடுத்தப்படும் என்றும் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

வடபகுதியில் இருந்து தமிழ்நாட்டுக்கே அதிகளவானோர் பயணம் மேற்கொள்ளப்படும் வாய்ப்புகள் உள்ளன.

ஆனாலும், தமிழ்நாட்டின், சென்னை, திருச்சி, மதுரை போன்ற விமான நிலையங்களைத் தவிர்த்து கேரளா, கர்நாடகா, ஆந்திரா, மகாராஷ்டிரா மாநிலங்களில் உள்ள விமான நிலையங்களுக்கே முதலில் பலாலியில் இருந்து விமான சேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அமைச்சர் அர்ஜுன ரணதுங்க கூறியிருக்கின்றமை ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. (ஐ)

காலைக்கதிர் Kalaikathir



# ஜனாதிபதி வேட்பாளரை ஓகஸ்டில் அறிவிப்பதற்கு ஜே.வி.பி. தீர்மானம்

**கொழும்பு, ஜூலை 09**

**மக்கள் விடுதலை முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளரை எதிர்வரும் ஓகஸ்ட் மாத நடுப்பகுதியில் அறிமுகப்படுத்தி வைக்க அந்தக் கட்சி தீர்மானித்துள்ளதாக அறிய முடிந்தது. எதிர்வரும் டிசெம்பர் மாதம் 9ஆம் திகதிக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தல் கட்டாயம் நடத்தப்படுமெனத் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய ஏற்கனவே அறிவித்துள்ளார்.**

ஜனாதிபதி வேட்பாளரைத் தெரிவு செய்யும் நோக்கில் பிரதான அரசியல் கட்சிகள் மும்முரமாகச் செயற்பட்டு வருவதுடன், கூட்டணி பேச்சுகளை நடத்தி வருகின்றன.

இம்முறை தேர்தலில் ஜே.வி.பியும் ஜனாதிபதி வேட்பாளர் ஒருவரை களமிறக்குமென அறிவித்திருந்த நிலையில், எதிர்வரும் ஓகஸ்ட் மாத நடுப்பகுதியில் வேட்பாளரை அறிமுகப்படுத்தி வைக்கவும் அந்தக் கட்சி தீர்மானித்துள்ளது.

கொழும்பில் நடக்கும் பிரமாண்ட கூட்டத்தில் அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் புத்திஜீவிகள், கலைஞர்கள், தொழிற்சங்கங்கள், சிவில் அமைப்புகள், பேராசிரியர்கள், மாணவர் அமைப்புகள் எனப்பல தரப்பினருடனும் பரந்துபட்ட கலந்துரையாடலை ஜே.வி.பி. அண்மைய நாள்களாக நடத்தி வருவதாகவும் அறிய முடிந்தது.



இதேவேளை, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் ஜனாதிபதி வேட்பாளர் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 11ஆம் திகதி நடைபெறவுள்ள கட்சியின் மாநாட்டில் அறிமுகப்படுத்தி வைக்கப் படவுள்ளார். அதற்கான ஏற்பாடுகள் அந்தக்கட்சியின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ செய்துவருகிறார்.

ஆயினும், வேட்பாளர் தெரிவில் பொதுஜன பெரமுனவில் பெரும் சிக்கல்கள் நிலவி வருகின்றன. முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவை வேட்பாளராகக் களமிறக்கவேண்டுமென அந்தக் கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்கள் விரும்பியுள்ளபோதும் அவரது அமெரிக்கக் குடியுரிமை இன்னமும் ரத்துச் செய்யப்படவில்லை என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது. (ஐ)

## புலனாய்வு அதிகாரி கைது!

*கொழும்பு, ஜூலை 09*

*2009ஆம் ஆண்டில் பத்திரிகையாளர் உபாலி தென்னக்கோன் தாக்கப்பட்ட வழக்கில் இராணுவப் புலனாய்வு அதிகாரி லலித் ராஜபக்ஷவைக் குற்றப் புலனாய்வுத் துறை (சி.ஐ.டி.) கைது செய்துள்ளது.*

*உபாலி மீது தாக்குதல் நடத்த பயன்படுத்தப்பட்ட வாகனத்தில் பதிவாகியிருந்த கைரேகைகள், லலித் ராஜபக்ஷவின் கைரேகைகளுடன் பொருந்தியதையடுத்து, அவரைக் கைது செய்ய சட்டமா அதிபர் சி.ஐ.டிக்கு அறிவுறுத்தியிருந்தார்.*

*சந்தேகநபர் மருதானையில் உள்ள சர்ச்சைக்குரிய திரிப்போலி இராணுவ முகாமில் பணியாற்றி வந்திருந்தார். இவர் வேறு சில தாக்குதல் வழக்குகளிலும் தொடர்புடையவர் எனக் கூறப்படுகிறது. (ஐ)*

## ஷரிஆ சட்டத்தின் கீழ் பலர் கொலையா ? விசாரணைக்கு உத்தரவு

கொழும்பு, ஜூலை 09

ஷரிஆ சட்டத்தின் கீழ் பலர் கொலை செய்யப்பட்டுள்ளனர் எனக் கூறப்படுகின்ற குற்றச்சாட்டு தொடர்பில் விசாரணை நடத்துமாறு பதில் பொலிஸ் மா அதிபர் உத்தர விட்டுள்ளார்.

ஷரிஆ சட்டத்தின் கீழ் இருபதுக்கும் அதிகமானவர்கள் கொலை செய்யப்பட்டிருக்கின்றனர் என மெதகொட அபேதிஸ்ஸ தேரர் குறிப்பிட்டிருந்தார்.

இது சம்பந்தமாக விசாரணையை மேற்கொள்ளுமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. (ஐ)

## 145 கிலோ கேரளக் கஞ்சாவுடன் பருத்தித்துறையில் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், ஜூலை 09

பருத்தித்துறை திக்கம் பகுதியில் 145 கிலோ கேரளக் கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனக் காங்கேசன்துறைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காங்கேசன்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உடுகம சூரிய தலைமையிலான பொலிஸ் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பிரகாரம் நேற்று நபர் ஒருவர் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

பருத்தித்துறைப்பகுதியைச் சேர்ந்த இரு இளைஞர்கள் மோட்டார் சைக்கிளில் பொதி செய்யப்பட்ட நிலையில், கஞ்சாப் பொதிகளை எடுத்துச் சென்றபோதே அந்தக் கஞ்சா மீட்கப்பட்டதுடன், 27 வயதுடைய நபரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதில் மற்றுமொருவர் தப்பி ஓடியுள்ளார். அவரைக் கைது செய்யும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

கைதுசெய்த நபரை பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கையை முன்னெடுத்துள்ளதாகக் காங்கேசன்துறை பொலிஸார் மேலும் கூறினர். (ஐ)

## அமைச்சரவை, பாதுகாப்புச் சபையை நேற்று முன்தினம் கூட்டிய ஜனாதிபதி!

கொழும்பு, ஜூலை 09

அமைச்சரவையும் பாதுகாப்புச் சபையும் நேற்று முன் தினம் மாலை அவசரமாகக் கூட்டப்பட்டன.

வழமையாக அமைச்சரவைக் கூட்டம் செவ்வாய்க்கிழமைகளில் இடம்பெறும் நிலையில், நேற்று முன் தினம் மாலை 5 மணிக்கு ஜனாதிபதி தலைமையில் அமைச்சரவைச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

தனிப்பட்ட விஜயம் மேற்கொண்டு ஜனாதிபதி வெளிநாடு செல்வதால், அமைச்சரவை நேற்று முன் தினம் கூட்டப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.



எனினும் இந்த அமைச்சரவைக் கூட்டத்தில் நிதியமைச்சர் உள்ளிட்ட அமைச்சர்கள் சிலர் கலந்து கொள்ளவில்லை. நேற்று முன்தினம் அமைச்சரவைக் கூட்டம் இடம்பெறவுள்ளதாக கடந்த சனிக்கிழமையே அமைச்சர்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

வார இறுதியில் அமைச்சர்கள் தமது சொந்த இடங்களுக்கு, வெவ்வேறு தேவைகளுக்காகக் கொழும்பிலிருந்து சென்றிருந்தமையால் அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை.

அத்துடன் வழமையாக புதன்கிழமைகளில் இடம்பெறும் பாதுகாப்புச் சபை கூட்டம் நேற்று முன்தினம் இரவு 7 மணிக்கு ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்றது. (ஐ)

# அதிபரின் இடமாற்றத்தை நிறுத்துமாறு மாணவர்கள், பெற்றோர்கள் போராட்டம்

மன்னார், ஜூலை 09

மன்னார் – சாந்திபுரம் அரச தமிழ் கலவன் பாடசாலையின் அதிபரின் இடமாற்றத்தை இரத்துச் செய்யக் கோரி பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் எனப் பலர் இணைந்து பாடசாலைக்கு முன்பாக கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

நேற்றுக் காலை 7 மணி தொடக்கம் இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அதிபரின் இடமாற்றம் தொடர்பாக தங்களுக்கு அறிவிக்கப்படவில்லை எனவும், பாடசாலை நலன் புரிச் சங்கத்தின் உறுப்பினர்கள் என்ற அடிப்படையில் தங்களிடம் எந்தவொரு கருத்துக்களையும் கேட்காது அவர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார் எனவும் தெரிவித்த



அவர்கள், இந்த இடமாற்றத்தை உடனடியாக இரத்துச் செய்யும் வரை பாடசாலைச் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கப் போவதில்லை எனவும் கூறினர்.

நேற்றைய பாடசாலைப் பொறுப்புக்களை ஒப்படைத்து மாற்றம் பெற்றுச் செல்ல வருகை தந்த அதிபரையும் பெற்றோர்கள் பாடசாலை வளாகத்தினுள் செல்ல அனுமதிக்கவில்லை.

இந்த விடயம் தொடர்பாக வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதனின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டது. சம்பவ இடத்துக்கு வருகை தந்த நாடாளுமன்ற உறுப்பினரும் மன்னார் நகர சபை உறுப்பினர்களும் மக்களிடம் கலந்து பேசி உரிய நடவடிக்கை மேற்கொள்வதாகத் தெரிவித்தனர்.

இருப்பினும் அந்த அதிபர் மீள நியமிக்கும் வரை தங்கள் போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை என பெற்றோர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.07.2019 இல் வெளியிடப்பெற்றது.